**தீபகத்திலிருந்து...**

**இறையாசீர்.**
தூய ஆவியின் விழாவைக் கொண்டாடி ஆவியின் மக்கள் என்ற அடையாளத்திலே நாம் திளைத்திருக்கிறோம். ஆவியின் மக்கள் என்ற அவ்வடையாளமே நம் வாழ்வில் மற்றவரிடமிருந்து வேறுபட்டு நிற்க நம்மை அழைக்கிறது. நாம் உயர்ந்தவர்கள் என்ற எண்ணத்திலோ அல்லது நாம் சிறப்பாக தேர்ந்துக்கொள்ளப்பட்டவர்கள் என்ற எண்ணத்திலோ அல்ல. ஆனால் நாம் அன்புள்ளம் கொண்டவர்களாய் வாழ்வதிலே வேறுபட்டு காணப்படவேண்டும். அதுவே இரக்கத்தின் ஆண்டாகிய இவ்வாண்டு நமக்கு விடுக்கும் அழைப்பு. சிறப்பான விதத்திலே இயேசுவின் திரு இதயத்தை கொண்டாடும் இம்மாதம் இவ்வழைப்பை ஆணித்தரமாக நம்முன் வைக்கிறது.

இயேசுவின் திரு இதயம் இரக்கத்தை முன்னிறுத்தும் விசுவாச அடையாளமாகும். 17ம் நூற்றாண்டிலே தூய மார்கரேட்மேரி ஆலகோக்கு என்னும் அருட்சகோதரிக்கு அளிக்கப்பட்ட வெளிப்பாட்டினாலே உலக மக்கள் இறைவனின் இரக்கத்தை உள்வாங்க வேண்டும் என்பதற்காக இறைவன் திருவுளமான விசுவாச அனுபவமே, இயேசுவின் தூய இதயத்தை நோக்கிய பக்தியாகும். இவ்விரக்கத்தின் ஆண்டில் இம்மாதம் நமக்கு முன்னிறுத்தும் இரக்கத்தின் மாதிரி கிறிஸ்துவின் தூய இதயமாகும்.

**இயேசுவின் இதயம் நமக்கு கண்முன் நிறுத்தும் மதிப்பீடுகள்**
- இறைத்தந்தையின் அளவற்ற அன்பு
- இறைமகனின் இணையற்ற தியாகம்
- நம் உள்ளத்தில் பற்றியெரிய வேண்டிய இறையன்பு
- உள்ளம் முழுதும் நிறைய வேண்டிய பிறரன்பு
- மன்னிப்பிலும் உறவிலும் மலரவேண்டிய உண்மை நம்பிக்கை

இவையனைத்தையும் உள்ளத்தில் நிறுத்துவோம். இறைஇயேசுவின் அன்பில் இரக்கத்தின் முழுமையை காண இம்மாதம் நம்மை அழைக்கிறது. இயேசுவின் தூய இதயத்திற்கு நம்மையும் நம் குடும்பங்களையும் ஒப்புக்கொடுப்போம். அவரது அன்பில் நிலைப்பெறுவோம். அந்த அன்பினாலே வழிநடத்தப்படுவோம்.

**இரக்கத்தின் ஆண்டிற்கு இம்மாத இரக்கச் செயல்:**
அன்றாடம் உங்கள் உறவுகளுக்காய் நீங்கள் முன்னெடுக்கும் தியாகங்களை சிந்தித்துப் பாருங்கள். இறைவனுக்கு நன்றி கூறுங்கள். அந்த தியாகங்களை இறைவனுக்காகவும் அவரது அன்பிற்காகவும் செய்ய முடிவெடுங்கள்.

## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

| | |
|---|---|
| 03.06.2016 | இயேசுவின் திரு இருதய பெருவிழா - திருப்பலி |
| 04.06.2016 | மரியன்னையின் மாசற்ற இதயம் - திருப்பலி |
| 05.06.2016 | பொதுக்காலம் முதல் ஞாயிறு - திருப்பலி |
| 11.06.2016 | தூய பர்னபா - திருப்பலி |
| 12.06.2016 | பொதுக்காலம் முதல் ஞாயிறு - திருப்பலி |
| 13.06.2016 | புனித பதுவை அந்தோணியார் திருவிழா - திருப்பலி |
| 19.06.2016 | பொதுக்காலம் 12ம் ஞாயிறு - திருப்பலி |
| 21.06.2016 | தூய அலோசியஸ் கொன்சாகா திருவிழா - திருப்பலி |
| 22.06.2016 | தூய தாமஸ் மூர் - திருப்பலி |
| 24.06.2016 | தூய திருமுழுக்கு யோவான் பிறந்த நாள் திருவிழா - திருப்பலி |
| 26.06.2016 | பொதுகாலம் 13ம் ஞாயிறு - திருப்பலி |
| 29.06.2016 | தூய பேதுரு தூய பவுல் பெருவிழா - திருப்பலி |
| | பள்ளிகள் திறப்பு பள்ளியில் பொது செபவழிபாடு |
| | ஞாயிறு மறைக்கல்வி திறப்பு விழா - திருப்பலி |

## பகுதி 2: விசுவாசத்தில் வளர...

இயேசுவின் திரு இருதயம் தரும் இரக்கத்தின் பாடங்கள்

தூய மார்கரெட் மேரி ஆலகோக்கு வாழ்வு தரும் செய்தி

மறைக்கல்வியின் முக்கியத்துவங்கள்

திருச்சபை செய்திகள்

## பகுதி 1: வழிபாட்டு வழிகாட்டி

### 03.06.2016 இயேசுவின் திரு இருதய பெருவிழா திருப்பலி

திருமதி ராணி சம்பந்தன்

முன்னுரை

இறையேசுவில் பிரியமான இறைமக்களே, "இயேசுவின் அன்பில்லாமல் வாழ்வது எவ்வுளவு கடினம்" அவரின் திவ்ய கரத்திலிருந்து ஆணி அறைந்த துளையிலிருந்து எழும் பிரகாச சுடரொளி. கண்களில் தெரியும் அன்பின் கசிவு திரு இருதயத்திலிருந்து எழும் பாசச்சுடர், பீரிட்டு எழும் இரக்கத்தின் ஊற்று, அன்பின் முழுப்பரிமாணம். இதையெல்லாம் அனுபவிக்க அன்பு நெஞ்சங்கள் அதிகரிக்க வேண்டுமென்பதே திருஇருதய பெருவிழா. புகழ்பாக்களின் மத்தியில் வாழும் ஆண்டவரை புகழ்வதே திருஇருதய அன்பின் பெருவிழா.

"பெருஞ்சுமை சுமந்து சோர்ந்திருப்போரே எல்லோரும் என்னிடம் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்" மத் 11:28 என்று இருகரம் நீட்டி இதய தாகத்தோடு அழைக்கிறார் நம் ஆண்டவர். இயேசுவின் வார்த்தைகளிலிருந்து அன்பு, சுமைகளை தாங்கும் அன்பாகவும் எப்பொழுதும் தன்னலமில்லாத, பிறர்நலனில் அக்கறைக்கொண்டு பிறருக்காக தன் உயிரை கொடுக்கும் வஞ்சகமில்லாத அன்பாகவும் உள்ளதை நாம் புரிந்துக் கொள்ளலாம். "அன்பே உங்கள் வாழ்வுக்கு ஆணிவேரும், அடித்தளமுமாய் அமைவதாக (எபே 3:11) என்று தூய பவுல் கூறுகிறார்.

இயேசுவின் திரு இருதயத்தில் நிரந்தரமாக நிலைக்கொண்டிருக்கும் அன்பு, கருணை, பரிவு போன்ற பண்புகளை நம் இருதயங்களிலும் நிரந்தரமாக அமைய வேண்டும். அவ்வாறு வாழ்வதுதான் நம் திருஇருதய ஆண்டவருக்கு நாம் எடுக்கும் பெருவிழாவாக அமையும். இந்த சிந்தனையோடு இத்திருப்பலியில் இணைவோம். திரு இருதய பக்தியை வெளிப்படுத்துவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அன்பின் சிகரமே இறைவா, நீர் காட்டிய பாதையில் பயணித்து கொண்டிருக்கும் எம் திருத்தந்தை, கர்தினால்கள், ஆயர்கள், குருக்கள் இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரையும் உம் திரு இருதயத்தில் வழிந்தோடும் அன்பின் ஊற்றால் நிரப்பி இறையாட்சி மலர செயல்படுத்தப்படும் அனைத்து செயல்பாடுகளும் சிறந்தோங்க உம்மை மன்றாடுகிறோம்.

2. தியாகத்தின் திரு உருவே இறைவா, தனக்கு குறிக்கப்பட்ட பணியை நினைத்து மனதில் கலக்கம் கொண்டாலும் உமது பரிகார பலியின் செயல்திட்டத்தை நிறைவேற்றி உலக மக்களுக்கு இரட்சணியம் வழங்கிய திருமகனைப்போல் நாங்களும் தன்னலம் கொள்ளாமல் பிறருக்காக தியாகமேற்கும் நல்லுள்ளத்தை வழங்குமாறு உம்மை மன்றாடுகிறோம்.

3. குணமளிக்கும் இறைவா, ஆரவார, ஆடம்பர வாழ்வே பெரிதென நினைத்து தெய்வ பயம் என்பதே அறியாமல் மனம் போனபடி வாழ்ந்துக் கொண்டிருக்கும் பேதை நெஞ்சங்களை உம் ஞான ஒளியால் திசைதிருப்பி குணமளிக்க வேண்டுமென்று இயேசுவின் திருஇருதயமே எம்மில் இரங்குமாறு உம்மை மன்றாடுகிறோம்.

4. நீதியின் தேவனே இறைவா, நடந்து முடிந்த தேர்தலில் வெற்றிப்பெற்றுள்ள தலைவர்கள் இனிமேலாவது மக்களின் தேவைகளை கருத்தில் கொண்டு நாட்டிற்கு பயன்தரக் கூடிய நல்ல திட்டங்களை, செயல்பாடுகளை செயல்படுத்த வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

**04.06.2016 மரியன்னையின் மாசற்ற இதயம் திருப்பலி**

திரு ஜீசஸ் மகுட மன்னன்

முன்னுரை

"நீயாவது எனக்கு ஆறுதல் அளிக்க முயற்சி எடு"

இறை இரக்கத்தின் ஆண்டில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். எனவே இது போராட்டத்தின் நேரமல்ல, மன்றாட்டின் நேரம். "மரியன்னையின் மாசற்ற இதய பக்தியை என் இதய பக்திக்கு இணையாக வைக்க நான் விரும்புகிறேன்" என்று பாத்திமா செய்தியில் இயேசு ஆண்டவரே வெளிப்படையாகக் கேட்டிருக்கிறார்.

இயேசு பாலனும் மாதாவும் லூசியாவிடம், "மரியாயின் மாசற்ற இதயம் நன்றியற்ற மனிதரின் முட்களால் ஒவ்வொரு கணமும் குத்தப்பட்டு நிறைந்து போயிருக்கிறது. பரிகார முயற்சி செய்து அதை எடுப்பாரில்லை, நீயாவது எனக்கு ஆறுதல் அளிக்க முயற்சி எடு" என்று பரிதாபமாய்க் கேட்டார்கள். அந்த முட்களை ஒவ்வொன்றாக அகற்றி அக்காயத்தை நம் அன்பினால் ஆற்ற வேண்டும், நம் ஒவ்வொரு நினைவும், சொல்லும், செயலும் அதற்கு ஏற்றதாய் அமைய வேண்டும்.

பாத்திமாவில் இறையன்னை காட்சியளித்தபோது "நான் மட்டுமே உங்களுக்கு உதவ முடியும். செபியுங்கள், பரித்தியாகங்களை ஒப்புக்கொடுங்கள். முதல் சனிக்கிழமை பக்தியை அனுசரியுங்கள்" என வாக்களிக்கிறார். மாதாவின் இதயம் "துயரம் நிறைந்த மரியாயின் மாசற்ற இதயம்" ஆகும். "மாசற்ற" என்ற அடைமொழி இறைவனால் மாதாவுக்கு அளிக்கப்பட்டது. "துயரம் நிறைந்த" என்ற அடைமொழி நம்மீதுள்ள அன்பினால் அன்னையே ஏற்றுக்கொண்டது.

மூவொரு இறைவன் மரியன்னையும், மரியாள் இறைவனையும் நேசிப்பதில் எந்தக்குறையும் இல்லாமல் அவர்கள் மோட்ச பாக்கியத்தை அனுபவிக்கிறார்கள். ஆனால் நாம் அவர்களை நேசிப்பதில் மோட்ச ஆனந்தம் இன்னும் முழுமைப்பெறவில்லை. நம்முடைய பாவங்களால் அது முழுமைப்பெறவில்லை. ஏனென்றால் அவை கடவுளை நோகச் செய்கின்றன. நம்மையும் பாவத்திற்குள்ளாக்குகின்றன. மாசற்ற அன்னையின் உள்ளத்தை அன்பு செய்வோம் என்றும் அதில் காணப்படும் அன்பிற்கேற்ற வாழ்வு வாழ்வோம் என்றும் வாக்களித்து இன்றைய திருப்பலியில் பக்தியோடு பங்கெடுப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. இரக்கமிகு இறைவா, இயேசுவின் தாயான மரியாவை பதிதரும், பிரிவினைக் கிறிஸ்துவர்களும் வணக்கம் செலுத்தும் முறையை எதிர்க்கிறார்கள். மற்ற சபைகளுக்கு மாறிக் கொண்டிருக்கிற கோடிக்கணக்கான கத்தோலிக்க மக்களும் அன்னைக்கு விரோதமானவர்களும் சேர்ந்து எதிராகப் பேசி வருகின்றனர். உமது அளவில்லா இரக்கப் பெருக்கத்தால், அவர்கள் விசுவாச உண்மையை உணரச் செய்து, வாழத் தேவையான வரமருள மரியாயின் மாசற்ற இதயத்தின் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

2. மகா பரிசுத்தமான தமத்திருத்துவமான இறைவா,உலகெங்குமுள்ள திவ்விய நற்கருணைப் பேழைகளில் இருக்கும் இயேசு கிறிஸ்துவின் விலைமதிக்கப்படாத திரு உடலையும், திரு இரத்தத்தையும், ஆத்துமத்தையும், தெய்வீகத்தையும் அவருக்குச் செய்யப்படும் நிந்தை, துரோகம், அலட்சியத்திற்குப் பரிகாரமாக உமக்கு ஒப்புக்கொடுத்து உமது திரு இருதயத்தினுடையவும், அளவற்ற பேறுபலன்களைப் பார்த்து நிர்பாக்கிய பாவிகளை மனந்திரும்பத் தேவையான வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. சமாதானத்தின் தந்தையே இறைவா, சகோதரி லூசியா 1939 மார்ச் 19ல் எழுதிய ஒரு கடிதத்தில் "உலகத்தில் யுத்தமா சமாதானமா என்பது நாம் முதல் சனிக்கிழமைப் பக்தியைக் கடைப்பிடிப்பதில் தான் இருக்கிறது. நம்மையே நாம் மாசற்ற இருதயத்திடம் ஒப்படைக்கவும் வேண்டும். இதனாலேயே இப்பக்தி முயற்சி பரவ வேண்டுமென்று நான் மிகவும் ஆசிக்கிறேன்" என எழுதியுள்ள வார்த்தைகளை அன்னையும் விரும்புவதால் நாமும் பக்தியோடு முதல் சனிக்கிழமை பக்தியைக் கடைப்பிடிக்கத் தேவையான வரமருள மரியாயின் மாசற்ற இதயத்தின் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

**05.06.2016 பொதுக்காலம் முதல் ஞாயிறு திருப்பலி**

திரு. சாண்டோ

முன்னுரை

இறை இயேசுவின் இனிய சகோதர சகோதரிகளே இன்று நாம் பொதுக்காலத்தின் 10ஆம் ஞாயிறை சிறப்பித்துக் கொண்டிருக்கிறோம். நம் சிந்தனைக்காக கொடுக்கப்பட்டிருக்கின்ற இன்றைய இறைவார்த்தைகள், இறைவனின் வார்த்தைக்கு ஆற்றல்களிலேயே சிறந்த ஆற்றலாகிய உயிரளிக்கும் ஆற்றல் இருப்பதை நமக்கு சுட்டிக்காட்டுகின்றது. எலியா இறைவனின் தூதுவராக வந்தவர் அந்த வார்த்தையைக் கொண்டு இறந்த மகனை உயிருடன் எழுப்புகின்றார். ஆண்டவர் இயேசுவும் நயீன் நகரத்து விதவையின் ஒரே மகனை உயிருடன் எழுப்புகின்றார். இந்த இரண்டு நிகழ்வுகளிலும் விதவைப் பெண்ணின் மீது இறைவன் காட்டும் அன்பு, பரிவு, இரக்கம், கருணை நமக்கு புரிந்துக் கொள்ள முடிகிறது. நாமும் சிந்திப்போம் இது இறை இரக்கத்தின் காலம் நம்மை நாடும் ஏழை எளிய மக்களிடம் இறைவனின் கண்கொண்டு இரக்கத்தையும் அன்பையும் பொழிபவர்களாக வாழவரம் வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. உயிரளிக்கும் ஊற்றே, எங்கள் திருத்தந்தை, ஆயர்கள், துறவரத்தார் அனைவரையும் உம்பாதம் சமர்ப்பிக்கின்றோம், உமது உயிருள்ள வார்த்தைகளை எடுத்தியம்பும் இவர்கள் மக்களின் நலனுக்காகவே தங்களின் அழைப்புக்கு செயல்வடிவம் கொடுக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்
2. தன்னலம் மறந்து தன் சிலுவையை நாள்தோறும் சுமப்பதன் மூலமே உம்மைப் பின்பற்ற முடியும் என்று கூறிய இயேசுவே, நாங்கள் உமது வார்த்தைக்கேற்ப உண்மையான சீடர்களாக வாழ அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்
3. கிறிஸ்துவின்மீது கொண்ட விசுவாசத்தினால் இறைமக்கள் ஆகியுள்ள நாங்கள் அனைவரும் இறைவனின் உன்னதக் கொடையான ஒற்றுமையையும் சமாதானத்தையும் அனுபவக்க அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.
4. ஞானத்தின் ஊற்றே எம் இறைவா, புதிய கல்வியாண்டில் அடியெடுத்து வைத்திருக்கின்ற நாங்கள் சந்திக்கின்ற சவால்களான பள்ளி கல்லூரி கட்டணங்கள், சீருடை, நோட்டு புத்தகம், இவைகளுக்கு ஏற்படுகின்ற செலவுகளை சமாளிக்கும் மனதிடத்தை தந்தருள வேண்டுமென்று, உம்மை மன்றாடுகின்றோம்.

**11.06.2016 தூய பர்னபா திருப்பலி**

திரு. ஜெயராஜ் இம்மானுவேல்

முன்னுரை

திருத்தூதர்களாகிய தூய பர்னபாவையும் தூய பவுலையும் தூய அவியானவர் சிறப்பான செயல்களுக்காக தேர்ந்தெடுத்து பல நாடுகளுக்கும் பயணம் செய்து வேற்றினத்து மக்களுக்கு இறைவார்த்தையை பகிர்ந்தளித்து பலரை ஆண்டவரோடு இணைக்கின்ற ஊழியத்தை கொடுத்து

அவர்களை வழிநடத்தினார். இவ்வித திருத்தூதுப்பணிகளை செய்ததினால் பலருடைய எதிர்ப்புகள், பலவித தண்டனைகள், கொடுமைகள் மற்றும் வியாதி, வருத்தங்களை சந்தித்தனர். தங்கள் உயிரையே இறைவனுக்கு கையளிக்கும் இதயத்துடன் கூட்டம் கூட்டமாக மக்களை மனமாற செய்தனர். இவர்களுடைய பணியின் நிமித்தம் இறைவனோடு இணைந்த அந்தியோக்கியா மக்கள் கிறிஸ்தவர்கள் என அழைக்கப்பட்டார்கள். கிறிஸ்துவர்களாக திருமுழுக்குப் பெற்றுள்ள ஒவ்வொருவரும் இறைவார்த்தையை மக்களுக்கு பகிர்ந்தளிக்கும் கடமையுடையவர்கள். ஒரு சிலரையாவது இறை இயேசுவோடு இணைத்திட நாம் நம்மை இப்பணிக்குக் கையளித்து தூய ஆவி நம்மை வழிநடத்திட இத்திருப்பலியில் பக்தியுடன் செபித்து பங்கு பெறுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. புனித பேதுருவின் வழிவந்த திருத்தந்தை, திருத்தூதர்களாக இயேசுவால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள குருக்கள் தூய பர்னபாவைப்போல் இயேசுவை அறியாதவர்களை நாடி தேடிச்சென்று அவர்களுக்கு இறை வார்த்தையை பகிர்ந்தளித்து அவர்கள் இயேசுவை ஏற்றுக்கொள்ளவும் திருமுழுக்கின் வாயிலாக கத்தோலிக்க திருச்சபையில் இணைக்கின்ற பணியினை உற்சாகத்துடன் செய்ய தூய ஆவியார் அவர்களை ஊக்கமூட்டி வழிநடத்த இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. இறை பணிக்காக தங்களையே அற்பணித்துள்ள அருட்கன்னியர்கள், துறவற சபையினர், இறைவாக்குப் பணியாளர்கள் தாங்கள் செய்ய வேண்டிய பணியை கருத்தோடு இறைமதிப்பீடுகளின்படி செய்யும் நல் இதயம் தர வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. இளைஞர்கள் உலகப்போக்கின்படி உலக இன்பங்கள், செல்வங்கள், பதவிகள் என்று தங்கள் ஆன்மாவை இழந்துவிடாமல் திருதூதர்கள்போல் இறைவனால் பெற்றுக்கொண்ட தாலந்துகளை இறைப்பணிக்காக பயன்படுத்தி கத்தோலிக்க திருச்சபையை கட்டியெழுப்பும் இயேசுவின் சீடர்களாக வாழும் வரம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. பள்ளி மாணவர்கள் படிக்கும் நாட்களில் நேரத்தை வீணடிப்பதிலும், பிறரை மதியாமல் வாழ்வதிலும், வயதுக்கு மீறிய செயல்கள் செய்வதிலும் ஈடுபடாமல் இறை வார்த்தையை தினம் படித்து அதன்படி நல்ல கிறிஸ்தவர்களாக வாழும் வரம்வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**12.06.2016 பொதுக்காலம் முதல் ஞாயிறு திருப்பலி**

திரு. சாண்டோ

முன்னுரை

மனமாற்றமே மனித மாண்புக்கு உயர்வு

இறையேசுவில் இனிய இறைமக்களே, நாம் இன்று பொதுக்காலத்தின் 11ஆம் ஞாயிறைக் கொண்டாடுகிறோம். இன்றைய திருவழிப்பாட்டு வாசகங்கள் முழுவதும் மனமாற்றத்தை சுட்டிக் காட்டுவதாகவே இருக்கின்றன. தாவீது அரசனின் தவற்றை சுட்டிக்காட்டி மனமாற்றத்திற்காக ஆண்டவரிடம் மன்றாடும்படி இறைவாக்கினர் நாத்தான் அறிவுறுத்துவதும், தான் செய்த தவறுக்காக மனம் வருந்தி மன்றாடும் பாவியானப் பெண்ணை மன்னித்து, மனதுக்குள் காழ்ப்புணர்வோடு சிந்திக்கும் பரிசேயரை கண்டிக்கின்றார் ஆண்டவர் இயேசு. மன்னிப்பு என்பது மனிதன் மனமகிழ்ச்சியோடு வாழ்வதற்கு இறைவன் தந்த மருந்து. சிந்திப்போம் நமது தவற்றை நினைத்துப்பார்த்து தாவீதின் மனநிலையில், அந்த பாவியானப் பெண்ணின் செயலைப்போல ஆண்டவரின் பாதத்தில் சரணடைந்து இத்திருப்பலியில் மனமற்றத்திற்காக மன்றாடி செபிப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. மன்னிப்பளிக்கும் இறைவா, உம் திருச்சபையை வழிநடத்தும் திருத்தந்தை ஆயர்கள் குருக்கள் துறவரத்தார் அனைவரும் உலக மக்களின் தவறுகளுக்காக மன்றாடி அனைவரும் இயேசுவின் பிள்ளைகள் என்ற உணர்வை விதைத்திட வரமருள உம்மை மன்றாடுகின்றோம்.
2. அன்பைப் பொழியும் இறைவா, எங்கள் ஊர்களிலும் நாட்டிலும் ஜாதி என்னும் பேய் தலைவரித்து ஆடிக்கொண்டிருப்பதை மறைமுகமாக நாங்கள் உணர்கின்றோம், பெரியவர்கள், வழிகாட்டிகள், தலைவர்கள் இதனை புரிந்துக் கொண்டு அதனை ஒழிக்க வரமருள உம்மை மன்றாடுகின்றோம்.
3. நீதியின் நாயகனே இறைவா, புதிய பொருப்புக்களை ஏற்றிருக்கும் தலைவர்கள் சுயநலம் பாராமல் ஏழை எளிய மக்களின் நலனை மனதில் கொண்டு தவறு செய்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை தட்டிக்கேட்கும் வரமருள உம்மை மன்றாடுகின்றோம்.
4. எங்கள் பங்குத் திருச்சபையில் உள்ள ஏழை, அநாதைகள், நோயுற்றோர், கைவிடப்பட்டோர் ஆகியோர்களுக்கு உமது இரக்கத்தையும், கருணையையும் வெளிப்படுத்தும் அன்புக் கருவிகளாக நாங்கள் வாழ வருமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**13.06.2016 புனித பதுவை அந்தோணியார் திருவிழா திருப்பலி**

திருமதி பத்மாவதி

முன்னுரை

இன்று புனிதர் பதுவை அந்தோணியாரின் திருவிழாவை கொண்டாடும் நாம் அவரைப் பற்றி முழுமையாக அறிந்துக்கொள்வது அவசியம். இவர் போர்ச்சுக்கல் நாட்டின் தலைநகரான லிஸ்பனில் ஆளுநரான மார்தின் திபியோனுக்கும் தேவரா தெரசம்மாள் என்ற பெற்றோருக்கு 1195 ஆகஸ்டு 15ல் பிறந்தார். அவரது இயற்பெயர் பெர்தினான்ந்து. இவருக்கு 2 சகோதரர்களும் 2 சகோதரிகளும் உண்டு. இவர்களில் கடைசி சகோதரி மரியம்மாள் தன்னை முழுவதும் கடவுளுக்கு கையளித்து துறவியானார். இறைபக்தியும், நற்குணங்களும் நிறைந்த குடும்பத்தின் நல்வாரிசாகிய பெர்தினாந்து தனது 5வது வயதில் லிஸ்பன் மறைமாவட்ட பள்ளியில் கல்வி பயின்றார்.

நற்கருணைமீது அளவு கடந்த பக்தி கொண்ட அவர், தமது 12ம் வயதில் நற்கருணை முன் மண்டியிட்டு செபித்து கொண்டிருந்தபோது, அலகை அவர்முன் தோன்றி அவரை சோதித்துப் பார்த்தது. மனக்கலக்கமுற்றாலும், தான் முழந்தாள் படியிட்டிருந்த சலவைக்கல்மீது பக்தியுடன் சிலுவை அடையாளம் வரைந்தார். அது அப்படியே பதிந்து விட்டது. இதைக்கண்ட அலகை அலறியடித்துக்கொண்டு ஓடிவிட்டது. அந்த சலவைக்கல் சிலுவை அடையாளத்துடன் இன்னும் லிஸ்பனில் இருக்கிறது. இதன்மூலம் சிலுவையின் மகத்துவத்தையும் இறைவனின் அழைப்பையும் உணர்ந்தார்.

பின் லிஸ்பனிலுள்ள "வின்ஸெந்தே" என்ற புனித அகுஸ்தினார் குருமடத்தில் சேர்ந்தார். குருமடத் தலைவரின் அனுமதியுடன் கோயிம்பரா் நகரிலுள்ள திருச்சிலுவை மடத்தில் சேர்ந்தார். எல்லாவகை வேலைகளையும் செய்தார். ஒருமுறை தோட்டத்தில் வேலைச்செய்துக் கொண்டிருக்கும்போது, அருகிலிருந்த ஆலயத்தில் தேவநற்கருணை எழுந்தேற்றம் நடந்துக்கொண்டிருந்தது, உடனே மண்டியிட்டு பீடத்தை நோக்கி செபித்தார். என்ன அதிசயம். தோட்டச்சுவர் விலகியது அவரும் இயேசுவை முழுமையாக கண்டு ஆனந்தித்தார். குரு பயிற்சி முடிந்து 1219ல் திருப்பொழிவு பெற்றார். 1220, 22 செப்டம்பர் பிரான்சிக்கு சபையில் சேர்ந்து பெர்தினாந்து என்ற தமது இயற்பெயருக்கு பதிலாக அந்தோணியார் என்று பெயர் சூட்டப்பெற்றார்.

போர்ஜஸ் நகரில் கில்லார்டு என்ற யூதன் நற்கருணையில் இயேசு இல்லை என்று சவாலிட்டான், அவனது சவாலை ஏற்று பட்டியில் கிடந்த கழுதை முன்னால் உணவை வைக்க, அக்கழுதை உண்ணாமல் நற்கருணையை மண்டியிட்டு வணங்கச் செய்தார். இதைக்கண்ட யூதன் மனம் மாறினான். ஓர் இரவு நண்பர் டுசோபிரபு வீட்டில் தங்கியபோது குழந்தை இயேசுவை கரங்களில் ஏந்தும் பாக்கியம்

பெற்றார். ஏழைப்பெண் வீட்டில் தங்கியபோது அப்பெண் பக்கத்து வீட்டில் இரவில் வாங்கி வந்த கண்ணாடி பாத்திரம் கீழே விழுந்து சிதறியது. அத்துண்டுகளை ஒன்று சேர்த்து முன்போல் மாற்றிவிட்டார், மீன்களுக்கு போதித்தார். இவ்வாறு பல புதுமைகளை செய்தார்.

இதனால் பொறாமைக் கொண்ட பிற சபையினர், அவரைக் கொல்ல விஷம் கலந்த உணவை பரிமாறினர். அவர் உணவின்மீது சிலுவை அடையாளத்தை வரைந்துவிட்டு சாப்பிட்டார். அவர் உயிருடன் இருப்பதைப் பார்த்தவர்கள் மனந்திரும்பினர், கோடி அற்புதர், அற்புத போதகர், ஏழைகளின் நண்பர், மறைவல்லுநர், நற்செய்தியை சொல்லாலும், செயலாலும்அறிவித்த இறைத்தூதர் எனப் பலவாறு புகழப்படும் புதுவை புனித அந்தோணியார். அவரது 36ம் வயதில் 1231 ஜீன் 12ம் நாள் இறைவனில் சங்கமித்தார். இப்புனிதரின் திருவிழா பலியில் இவரின் பரிந்துரை வழியாக நாமும் தூய வாழ்வு வாழ இறைவனை மன்றாடி இப்பலியில் செபிப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. பாவி எம்மை தேடி வந்த எம் இறைவா, உமது திருச்சபையின் தலைவராகிய திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர்,துறவியர் மற்றும் துறவறத்தார் அனைவரையும் உம் நேரிய வழியில் பாதுகாத்து வழிநடத்தும்படி புனித அந்தோணியார் வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
2. அருளின் ஊற்றே இறைவா, மின்னல் வேகத்தில் விஞ்ஞானம் வளரும் இச்சூழலில் பலவகையான வழிகளில் சிக்கி சீரழியும் எம் பிள்ளைகளை நீர்தாமே நல்ல ஞானம், அருள், இறைபக்தி, கீழ்ப்படிதல் என்பனவற்றால் நிறைத்து காத்தருளும்படி புனித அந்தோணியார் வழியா உம்மை மன்றாடுகிறோம்.
3. இரக்கத்தின் சிகரமே எம் இறைவா, உம் மக்களாகிய நாங்கள் நீர் கூறியதுபோல் கண்ணுக்கு கண், பல்லுக்கு பல் என்று பகைமையை வளர்க்காமல் நீர் கூறியதுபோல் "ஒரு கன்னத்தில் அறைந்தால் மறு கன்னத்தையும் காட்டு" என்பதற்கிணங்க எம்மை வெறுப்பவர்களுக்காகவும் வேண்டிடும் நல்ல மனதினை அருளும்படி புனித அந்தோணியார் வழியா உம்மை மன்றாடுகிறோம்.
4. வழிநடத்தும் இறைவா, பணம், புகழ், பதவி, பொறாமை, சண்டை எனும் அலகையின் மாயவலையில் சிக்கி தவிக்கும் உம் மக்களை உமது சிலுவையினால் காத்து வழிநடத்துமாறு புனித அந்தோணியார் வழியா உம்மை மன்றாடுகிறோம்.

**19.06.2016 பொதுக்காலம் 12ம் ஞாயிறு** **திருப்பலி**

திருமதி ராணி வில்சன்

முன்னுரை

இணைக்கும் பாலமான திருப்பலியில் இணைந்து செபிக்க வந்திருக்கும் இனிய நல் உள்ளங்களுக்கு வணக்கம். இந்த உலகில் பிறந்த அனைவரும் ஏதோ ஒரு தேடலில் ஓடிக்கொண்டிருக்கின்றனர். இத்தகைய தேடலில் தான் யார் என ஆய்வு செய்து, தன்னை அறிந்து கொள்பவர் ஞானியாகிறார். இப்படிப்பட்டவர்கள் முதலில் தன்னை ஆளக் கற்றுக்கொண்டு பிறகு தரணியையும் ஆளுகின்றனர்.
இன்றைய வாசகங்களும் நற்செய்தியும் நமக்கு இதை தெளிவாக அறிவிக்கிறது. தான் எங்கிருந்து வந்தவர், கொடுக்கப்பட்ட அருள், கடமை, பணி என்ன? எதை நோக்கிச் செல்ல வேண்டும் என உணர்ந்தவர் இறை இயேசு. இதே போன்று கொடுக்கப்பட்டக் கனிகளிலும் வரங்களிலும் சிறந்து விளங்க வேண்டும். இரக்க உள்ளத்தைக் கொண்டு இரக்கச் செயல்களை செய்யச் சொன்னவரையே ஊடுருவக் குத்திவிட்டு பின் கதறக்கூடாது. ஆகவே, நீங்கள் அனைவரும் கடவுளுடைய உரிமைப்பேற்றை அடைந்தவர்கள். ஆகையால் உங்களிடையே எந்த வேறுபாடும் இல்லாமல், சுய ஆய்வு செய்து உங்களது குடும்பம், சமூகம் திரு அவை பணிச்சுமைகளோடு என்னை பின்பற்றி உங்களை ஆட்கொண்டு இவ்வுலகையும் இறை சமூகமாக மாற்றி ஆளுங்கள் என இன்று நம்மை அழைக்கிறார் இறைவன். இரக்க உள்ளத்தோடு இரக்கச் செயல்களை

ஆற்றலோடும், வல்லமையோடும் நம் சுமைகளோடும் உறுதியாகச் செய்ய அருள்வேண்டி உருக்கமாக இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. தாயும் தந்தையுமான இறைவா, தூய ஆவியால் நிறைந்து கிறிஸ்துவின் வழியாக விண்ணகத்தாரோடு உறவு கொண்டு, நம்பிக்கையின் ஒளியில் பிரகாசித்து, இறைத்தந்தையை மகிமைப்படுத்த இறை மக்களை அழைத்துச் செல்ல பணிபுரியும் திரு அவை ஆட்சியாளர்கள் அனைவரையும் உமது இரக்கத்தால் நிரப்பி ஆசீர்வதிக்க உம்மை மன்றாடுகிறோம்.

2. அன்பே உருவான இறைவா, "புனிதர்கள் புனிதத்தின் சிகரத்தை எட்டிப் பிடிக்க முடிந்ததென்றால் ஏன் என்னால் இயலாது நானும் முயலுவேன்" எனக்கூறி தன்னை சுய ஆய்வுச் செய்து புனிதர் ஆன பல புனிதர்களைப் போன்று மனம்மாறும் புனித லொயோலா இஞ்ஞாசியார் இதே போன்ற கொடையை எங்கள் அனைவருக்கும் அருள வேண்டுமென உம்மை கெஞ்சி மன்றாடுகிறோம்.

3. இரக்கமே உருவான இறைவா, வயது முதிர்ந்த ஏழை, விதவை தாய்மார்களை உம் கரத்தில் ஒப்புக்கொடுக்கிறோம். உறவுகள் இருந்தும் இல்லாமலும் தவிக்கும் அவர்களுக்கு நீர் எல்லாமாக இருந்து வேண்டிய உதவிகளைச் செய்ய வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. உழைத்து உண்ண வேண்டும் எனக் கூறிய இறைவா, எத்தனையோ குடும்பங்கள், உண்ண உணவின்றி, வேலை கிடைக்காமல் வறுமையில் வாடுகின்றனர். பிள்ளைகளுக்கு கல்வி, நல்ல உணவு, உடை கொடுக்க இயலாமை போன்ற நிலை மாறி நல்ல வேலை கிடைத்து நிலைவாழ்வு வாழ வேண்டி உம்மை மன்றாடுகிறோம்.

**21.06.2016 தூய அலோசியஸ் கொன்சாகா திருவிழா திருப்பலி**

திருமதி டிலைலா சேவியர்

முன்னுரை

இவர் இத்தாலியில் மான்ருவா நகரில் பெர்டினான்ட் கொன்சாகா என்ற பிரபுவின் முதல் பிள்ளையாக பிறந்தவர். இவரின் தந்தை இவர் பேரும் புகழும் உள்ளவராகப் பிற்காலத்தில் திகழ வேண்டுமென விரும்பி போர் வீரரின் தலைவராகும் பயிற்சி அளித்தார். ஆனால் இவரின் தாய் மரியன்னையின் பக்தி நிறைந்தவளாக இருந்ததால் தனது 9வது வயதிலேயே பிளாரன்ஸ் நகரில் மரியன்னையின் பேராலயத்தில் கற்பென்னும் வார்த்தைப்பாட்டை இவர் எடுத்துக் கொண்டார். வாரத்தில் மூன்று நாட்கள் கடுந்தவம் இருப்பார். இன்னும் பல கடுமையான ஆன்மீக தவ முயற்சிகளையும் செய்து வந்தார்.

இவர் தனது 13வது வயதில் ஸ்பெயின் நாட்டில் அரச அரண்மனையில் தங்கியிருந்தபோது, அங்கே நிலவிய பலதரப்பட்ட சீர்கேடுகளில் தன்னை சிக்க வைக்காமல் ஒழுக்க நெறிகளை கடைப்பிடித்து தூய வாழ்வினை மேற்கொண்டார். அப்போது இயேசு சபையினரைப்பற்றியும், அவர்களின் மறைப்பரப்புப் பணியைப் பற்றியும் கேள்வியுற்று அச்சபையில் சேரவேண்டுமென்று முடிவெடுத்தார். ஆனால் அவருக்கு தன் தந்தை, மற்றும் அரண்மனை திருச்சபையின் வழியாகவும் கடுமையான எதிர்ப்பு ஏற்பட்டது. முடிவாக தமக்கு வரவேண்டிய அனைத்து சொத்துக்களையும் தம் தம்பிக்கு எழுதி வைத்துவிட்டு துறவறத்தை மேற்கொண்டார்.

கி.பி. 1587ல் இயேசு சபையில் சேர்ந்தார். குருமாணவராக படிக்கும்போது உரோமையில் பிளேக் நோயினால் பலர் தாக்கப்பட்டபோது அவர்களுக்கு மருத்துவமனையில் பணிபுரிந்தார். அந்தச் சூழலில் இவரும் கொடிய நச்சுக்காய்ச்சலில் தாக்கப்பட்டார். அப்போது இவருக்கு வயது 23, இத்தனை குறைந்த வயதிலும் ஏராளமான புண்ணியங்களைச் செய்து வான்வீட்டிற்கு தன்னை தயார் நிலையில் வைத்திருந்தார். 1726ல் திருத்தந்தை, 13ம் பெனடிக்ட் இவருக்கு புனிதர் பட்டம் அளித்தார். இவர்

தன்னுடைய ஆன்ம குருவான இராபர்ட் பெல்லார்மினிடம் "தான் விரைவில் இறக்கப்போவதாகச் சொன்னார். இதை வானதூதரே தோன்றி கூறியதாகவும் வெளிப்படுத்தினார். தான் கிறிஸ்துவின் திருவுடல், திரு இரத்தத்தின் திருநாளன்று இறக்கப்போவதாக உணர்ந்ததையும் கூறினார். தந்தையும் இவருடைய இறுதிநாட்களில் அலாய்சியுசுடன் இருந்து அவருக்கு அருளடையாளங்களை கொடுத்து நல்மரணம் அடைய உதவினார்.

**இவரது அடையாள உடைகள்**

இவர் அணிந்திருந்த அங்கியும், மேலங்கியும் (Surplice) இவரை ஓர் இறை ஊழியன் என்று காட்டியது. இவர் வைத்திருக்கும் லில்லிமலர் இவரின் புனிதத்தையும் கையிலுள்ள சிலுவை-தியாகத்தையும், பக்தியையும் வெளிப்படுத்துகிறது. இவர் என்றும் வைத்திருக்கும் செபமாலை-தேவஅன்னையின் பக்தியும், மண்டை ஓடு-தான் இளமையில் இறப்பையும் வெளிப்படுத்தியது.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. நல்ல மேய்ப்பனாம் எம் இறைவா, உமது மீட்பின் பணியை தொடர உம்மால் தெரிந்தெடுக்கப்பட்ட திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், கன்னியர் மற்றும் அருட்பணியாளர்கள் அனைவரும் தூய ஆவியாரின் வல்லமையாலும், வழிநடத்துதலாலும் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட திருச்சபையை தூய்மையின் பாதையில் வழிநடத்த வேண்டுமென்று தூய்மையாகவும், எளிமையாகவும் வாழ்ந்து காட்டிய புனித அலாசியுஸ் கொன்சாகா வழியாக உம்மை மன்றாடுகிறோம்.

2. எளியவர்களின் செபத்தைக் கேட்பவரே, தீராத வியாதியாலும், மனவேதனை, மனஅழுத்தம் தீர்வு காணமுடியாத பிரச்சனைகள், ஏமாற்றங்கள் போன்ற துன்பங்களை அனுபவிப்பவர்கள்மீது மனமிரங்கும் இவர்களின் கண்ணீரை துடைத்தருளும். இவர்கள் நம்பிக்கையோடும், விவாசத்தோடும் செபிக்கும் செபங்களை தந்தைக்குரிய பாசத்தோடு செவிசாய்க்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. தூய உள்ளத்தோர் பேறுபெற்றோர் என்று கூறிய இறைவா, இன்றைய சமுதாயச் சூழ்நிலையில் இளைஞர்களும் இளம் பெண்களும் தங்களுடைய நேரத்தையும் பணத்தையும் அறிவு, ஆற்றலையும் தேவையற்ற தீமையான வழிகளான மோசமான திரைப்படங்கள், குடிவெறி, கற்பழித்தல், போதைக்கு அடிமை, கருகலைத்தல், இன்டர்நெட் போன்ற கொடுமைகளுக்கு தம்மையே அடிமையாக்காமல் தூய்மையே உருவான இறைவனின் துணையோடு தங்களின் மேன்மையான வாழ்வை வளமாக்கிக்கொள்ளும் வரம்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. தூய அலோசியஸ் கொன்சாகா அவர்களின் வழியை பின்பற்றி இன்று இறையரசுக்காக பணியாற்றிவரும் பல துறவற சபைகளை உம் பதம் படைக்கின்றோம். சிறப்பாக தமிழகம் புதுவை ஆகிய இடங்களில் பணிப்புரியும் கொன்சாகா சகோதரிகளை நிறைவாய் ஆசீர்வதித்து வழிநடத்திட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## 22.06.2016 தூய தாமஸ் மூர் திருப்பலி

திரு விக்டர்

முன்னுரை

புனித தாமஸ் மூர் அவர்கள் 07.02.1478 அன்று திரு ஜான் மூர் அவர்களுக்கும் திருமதி ஆக்னஸ் அவர்களுக்கும் அன்பு மகனாக இங்கிலாந்தில் உள்ள லண்டன் மாநகரில் பிறந்தார். அங்குள்ள மிகச்சிறந்த பள்ளிகளில் ஒன்றான புனித அந்தோணியார் பள்ளியில் பள்ளிப்படிப்பையும் லண்டன் மாநகரில் உள்ள உலகின் மிகச்சிறந்த ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பையும் முடித்து லண்டன் மாநகரில் வழக்கறிஞர் தொழிலைத் துவங்கினார்.

அரசியலில் ஈடுபட்டு லண்டன் பார்லிமென்டுக்கு உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டார். திருமதி ஜான் கால்ட் (John Colt) அவர்களை திருமணம் செய்துக்கொண்டு நான்கு குழந்தைகளுக்கு தந்தையானார். மிகச்சிறந்த நாட்டுப்பற்றுக் கொண்டவராகவும் கிறிஸ்தவ வாழ்வு வாழ்வதில் உண்மையுள்ளவராகவும் வாழ்ந்தார். அந்நாட்களில் மார்ட்டின் லூத்தர் கொண்டுவந்த திருச்சபை சீர்த்திருத்த உபதேசங்களை வண்மையாக கண்டித்தார்.

இங்கிலாந்து அரசர் எட்டாம் ஹென்றி அவர்களின் முறையற்ற திருமணத்தை எதிர்த்தும், திருச்சபையின் தலைமையைக் கைப்பற்றிட அரசர் எடுத்த முயற்சிகளை கண்டித்தும் குரல் கொடுத்தார். அரசனை எதிர்த்து தனது கொள்கையில் உறுதியாய் நின்றதால் அவரைக் கைதுச்செய்த அரசன் அவர் தன்னை மாற்றிக்கொள்வார் என்று எதிர்பார்த்தான். அவருடைய உற்ற நண்பர்கள்மூலம் எச்சரிக்கை செய்தும் தாமஸ்மூர் தன்னுடைய கொள்கையில் உறுதியாய் நின்றதால் 6.7.1535ம் நாள் அவர் தலையை வெட்டி கொலை செய்தான். அவரும் இரத்த சாட்சியாக மரித்தார். திருச்சபை இவருக்கு புனிதர் பட்டம் வழங்கி சிறப்பித்தது.

இவரது உயரிய வாழ்வைக் கண்ணுற்ற திருத்தந்தை இரண்டாம் ஜான்பால் அவர்கள் கி.பி.2000ம் ஆண்டு வழக்கறிஞர்களுக்கும் தேசியவாதிகளுக்கும் பாதுகாவலராக நியமித்து அவரை பெருமைப்படுத்தினார். நல்ல கனிகொடுத்து வாழவேண்டும் என்ற இன்றைய நற்செய்தி வாசகத்திற்கு சான்றாக வாழ்ந்த இப்புனிதரின் வாழ்வு நமது விசுவாச வாழ்விற்கு உரமூட்டுவதாக அமைந்துள்ளது. அந்நகரின் திருவிழாவைக் கொண்டாடும் நாமும் அவரைப்போல உண்மைக்கு சான்றாகவும், திருச்சபைக்கு உறுதுணையாகவும் இருப்போம் என்று உறுதியேற்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. எல்லாம் வல்ல அன்பு இறைவா, திருச்சபையை வழிநடத்தும் எமது தலைவர்களை ஒப்புக்கொடுக்கிறோம். உலக போக்கின்படி போகாமலும், அரசியல் தலைவர்களுக்குப் பயப்படாமலும் உமது உண்மை பாதையில் எம்மை வழிநடத்திட வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாகிறோம்.

2. எம்மை அன்பினால் வழிநடத்தும் இறைவா, பொதுநிலையினராக இருந்தும் ஒரு புனித வாழ்வு வாழமுடியும் என்று எண்பித்த புனித தாமஸ் மூர் அவர்களின் வாழ்வு எங்களது ஆன்மீக உலக வாழ்வுக்கு வழிகாட்டுவதாய் அமையட்டும். எங்களது உலக வாழ்வின் ஒவ்வொரு நிலையிலும் உண்மையுள்ளவர்களாய் அர்ப்பணிப்போடு வாழ்ந்து உமக்கு சான்று பகரும் வாழ்வு வாழ வரமருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

3. எமக்காக யாவும் செய்யும் இறைவா, புதிய கல்வியாண்டில் அடியெடுத்து வைத்துள்ள எங்கள் பிள்ளைகளை பாதுகாத்தருளும். ஞானத்திலும், அறிவிலும், உடல் சக்திலும், பக்தியிலும், பரிசுத்தத்திலும் வளர்ந்து மற்ற பிள்ளைகளைக் காட்டிலும் உம்மை நம்புகிற பிள்ளைகளின் பிள்ளைகளாய் எல்லாவற்றிலும் முதன்மை பெற்றிருக்க சிறப்பு பெற்றிருக்க வரமருள வேண்டுமென உம்மை மன்றாடுகிறோம்.

4. எங்களை அதிகமாய் நேசிக்கும் இறைவா, தமிழ் நாட்டில் அமைந்துள்ள இந்த புதிய ஆட்சி மக்களுக்கு நன்மை செய்யும் ஆட்சியாக நீதி, நேர்மை, உண்மை இவற்றைக் கடைப்பிடித்து தமிழகத்தை வளமான மாநிலமாக மாற்றும் முயற்சியை இடைவிடாமல் செய்யும் ஆட்சியாக மக்கள் அனைவராலும் விரும்பப்படுகின்ற ஆட்சியாக மாறிட ஆட்சியாளர்களை நீர் இயக்க வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**24.06.2016 தூய திருமுழுக்கு யோவான் பிறந்த நாள் திருவிழா திருப்பலி**

திருமதி ராணி சம்பந்தன்

முன்னுரை

இறையேசுவில் பிரியமான இறைமக்களே, இரட்சகர் இயேசு கிறிஸ்துவின் முன்னோடி, திருமுழுக்கு யோவானின் பிறப்பின் நாளாகும். ஆலய குருவான செக்கரியாசுக்கும், கருத்தரிக்க இயலாதவர் என்று உறவினரால் பழிக்கப்பட்ட எலிசபெத்தம்மாளுக்கும் பிறந்தவர். இறைவாக்கினர் எசாயா தனது நூலில் இதைப்பற்றி முன்பே அறிவித்துள்ளார். "பாலைநிலத்தில் யோவான் அனைவருக்கும் பாவமன்னிப்பு பெற திருமுழுக்கு பெறுங்கள்" என்று பறைசாற்றி வந்தார். நான் உங்களுக்கு தண்ணீரால் திருமுழுக்கு கொடுக்கிறேன், எனக்குப்பின் வருபவர் மிதியடிவாரை அவிழ்க்கக்கூட எனக்கு தகுதியில்லை என கூறி வந்தார். திருமுழுக்கு யோவான் தாயின் உதிரத்திலேயே தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டவர், அர்ச்சிக்கப்பட்டவர், பெண்களில் பிறந்தவர்களில் இவரைவிட உயர்ந்தவர் எவருமில்லை என்று நம் இயேசுவே இவரை புகழ்ந்துள்ளார். நம் இரட்சகர் இயேசுவுக்கு யோர்தான் நதியில் திருமுழுக்கு கொடுத்தவர். என் அன்பார்ந்த மகன் இவரே, என்று வானத்திலிருந்து குரல் எழும்பியதை கேட்டவரும் இவரே. மெசியாவான இயேசுவின் வருகைக்கு மக்களை ஆயத்தம் செய்யவே இவர் வந்தார்.

நீதி நேர்மைக்கு சிறந்த உதாரணமும் இவரே. ஏரோது ஒரு அரசனாக இருந்த போதிலும் அவரின் தவற்றை சுட்டிக்காட்டி நீதிக்காக தன் உயிரையே தியாகம் செய்தவரும் இவரே. இவரை ஒரு முன்னோடியாக கொண்டு நமது வாழ்வில் நீதி, நேர்மைக்கு முதலிடம் தரும் ஆற்றலை வேண்டி இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. ஆசிர்வதிக்கும் இறைவா, எம் திருத்தந்தை, அவரால் அங்கீகரிக்கப்பட்ட கர்தினால்கள், பேராயர்கள், ஆயர்கள், வழிநடத்தும் குருக்கள், இருபால் துறவியர், பொதுநிலையினர் அனைவரும் இயேசுவுக்கே திருமுழுக்கு கொடுத்த திருமுழுக்கு யோவானைப்போல தூய ஆவியால் அர்ச்சிக்கப்பட்டவர்களாய் இறை ஊழியத்தில் நம்பிக்கையுடன் செயல்படுபவர்களாய் வாழ்ந்திட உம்மை மன்றாடுகிறோம்.

2. ஞானத்தின் ஊற்றே எம் இறைவா, உலகெங்கும் வாழும் கிறிஸ்தவர்கள் இயேசுவின்பால் உறுதியான அன்பு கொண்டு திருவிவிலிய பகிர்வுகளை உண்மையோடும், நிறைவோடும், உள்ள உணர்வோடும் கற்று அடுத்தவருக்கு அறிவிக்கக் கூடிய மனபாங்கினை பெற்று வாழ்ந்திட உம்மை மன்றாடுகிறோம்.

3. நீதியின் அரசரே இறைவா, இயேசுவின் மக்களாகிய நாங்கள் எதற்கும் அஞ்சாது நீதி நெறியோடு வாழவும், திருமுழுக்கு யோவானைப்போன்று மற்றவர்கள் செய்யும் பாவச்செயல்பாடுகளையும், தீமைகளையும் தட்டிக்கேட்கும் மனதினைத் தந்தருள வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

4. இரக்கத்தின் நாயகனே இறைவா, பாவப்பட்ட மக்களுக்காக நொறுக்கப்பட்ட மக்களுக்காகவே வந்தேன், சிலுவை மரணத்தில் என் உயிரையும் தந்தேன் என்ற உம் தன்னிரக்கத்தின் வெளிப்பாடும், மீட்பும் பயன் பெற வாழ்வாதாரம் குறைந்த உம் மக்களை நீதியுடன் பாதுகாக்க வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

**26-06-2016 பொதுகாலம் 13ம் ஞாயிறு திருப்பலி**

திரு ஜான் அலெக்ஸ்

முன்னுரை

அன்புக்குரியவர்களே, நம் வாழ்வின் பல்வேறு பொறுப்புகளில் நாம் வெற்றியும் நிறைவும் அடையாததற்கு காரணம் செதுக்கப்படாமல் சிதறுகின்ற கவனங்களே என்பதை இன்றைய இறைவார்த்தை நமக்கு எடுத்துரைத்து நம் கவனத்தை எலிசாவைப்போல் செதுக்க அழைப்பு விடுக்கின்றன. எவ்வாறு கவனங்களை செதுக்குவது என்பதற்கு முதல் வாசகத்தில் எலிசாவின் செயல் உதாரணமாக அமைகிறது. முதலில் மறுத்தாலும் பிறகு தன் கவனத்தை முழுமையாக செலுத்துவதில் ஈடுபட்டார். என் இல்லற.. குடும்ப.. கிறிஸ்துவ திருமுழுக்கு அர்ப்பணத்தில் என் கவனம் சிதறுகின்றதா? அல்லது செதுக்கப்படுகின்றதா? என்பதை சீர்தூக்கி பார்க்க அழைக்கப்படுகின்றோம். இன்றைய நற்கருணை கொண்டாட்டம் நம் கவனங்களை முழுமையாக ஆக்கிரமித்து ஆட்கொள்ள தொடர்ந்து இத்திருப்பலியில் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

5. எம் வாழ்வினை முழுமையாய் வாழ அழைக்கும் தெய்வமே, திருச்சபைக்காக உமக்கு நன்றி கூறுகின்றோம். அதனை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள் மற்றும் பொறுப்பிலுள்ள அனைவரையும் ஆசீர்வதித்து காத்திட வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

6. உங்களை யாராவது நிராகரித்தால், உங்கள் கால் செருப்பில் உள்ள தூசியை தட்டிவிட்டு, அந்த இடத்தை விட்டு செல்லுங்கள் என்று சொன்ன இயேசுவே, எங்கள் வாழ்வின் பல்வேறு சூழ்நிலைகளில் எங்களை புறக்கனித்தவர்களை மன்னித்து உமது மேலான அன்பை அவர்கள் மத்தியில் விதைக்க எங்களுக்கு தேவையான வரமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்

7. பிறர் மீது நாங்கள் கொண்டுள்ள பொறாமைகள், விருப்பு வெறுப்புகள் யாவையும் போக்கிடவும், ஆண்டவர்தாமே எமது உரிமைச் சொத்து அவரே எம் கின்னம், எமக்குரிய பங்கைக் காப்பவரும் அவரே என்பதை உணர்ந்து, அவரது வார்த்தைக் கேற்ப உண்மையான சீடர்களாக வாழ அருள்தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்

8. அன்பின் இறைவா, உமது முன்னிலையில் எமக்கு எப்போதும் நிறைவான மகிழ்ச்சி உண்டு, உமது வலப்பக்கத்தில் எப்போதும் பேரின்பம் உண்டு என்பதை நாங்கள் உமது வாழ்வின் வழியை அறிந்து கொள்ளவும் உன்னதக் கொடையான ஒற்றுமையையும் சமாதானத்தையும் அனுபவிக்க அருள்தர வேண்டுமென்றும் இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

9. எங்கள் பங்குத் திருச்சபையில் உள்ள ஏழை, அநாதைகள், நோயுற்றோர், கைவிடப்பட்டோர் ஆகியோர்களுக்கு உமது இரக்கத்தையும், கருணையையும் வெளிப்படுத்தும் அன்புக் கருவிகளாக நாங்கள் வாழ வருமருள வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

**29.06.2016 தூய பேதுரு தூய பவுல் பெருவிழா** **திருப்பலி**

**திரு D.R.V ராஜா**

**முன்னுரை**

இன்று தூய பேதுரு, தூய பவுல் திருத்தூதர்கள் விழாவை திருச்சபை கொண்டாடுகிறது. இயேசுவின் முதல் சீடரும் திருச்சபையின் முதல் திருத்தந்தையுமானவர் தூய பேதுரு. இன்றைய நற்செய்தியில் குறிப்பிட்டிருக்கிற விண்ணரசின் திறவுகோலையே இயேசு அவரிடம் கையளித்தார். ஏனென்றால் இந்த பாறையின்மீது என் திருச்சபையைக் கட்டுவேன் என்று இயேசு வாக்களித்தார். சவுலாகிய தூய பவுல் கிறிஸ்தவர்களுக்கு எதிரான பல கொடுமைகள் செய்தும் தமஸ்கு நகரில் தம்மை வெளிப்படுத்திய இயேசுவை விசுவசித்து முழுமையான இறை ஊழியனாய் வாழ்ந்து தம் வாழ்நாள் முழுவதும் கிறிஸ்துவை

அறிவிப்பதையே தன் உயிர் மூச்சாய் கொண்டு, இறைவார்த்தைக்காகவே வாழ்ந்தார், தூய பவுலடிகளார். அநேக தண்டனைகளையும், துன்பங்களையும், நாடுகடத்தல் போன்ற கொடுமைகளைச் சுமந்து இறந்தார். ஆனால் இன்றைய நற்செய்தி கூறுவதுபோல நல்ல ஓட்டத்தை ஓடி விசுவாசத்தைக் காத்துக்கொண்டார். திருச்சபையின் இவ்விரு தூண்களின் விழாவை கொண்டாடும் இன்று சிறப்பான விதத்திலே இவர்களது இடத்தை ஏற்றிருக்கும் திருத்தந்தைக்காக செபிப்போம். அவரது வாழ்வு கிறிஸ்துவின் ஒளியாய் தொடர்ந்து மிளிர நாம் மன்றாடுவோம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. **திருத்தந்தைக்காக:** திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களுக்காக சிறப்பான விதத்திலே மன்றாடுவோம். திருச்சபையின் தூணாய் இன்று விளங்கும் அவரை இறைவன் பாதுகாக்க வேண்டுமென்றும் அவர் வழியாய் நம் ஒவ்வொருவரையும் வழிநடத்திட வேண்டுமென்றும் செபிப்போம். ஓய்வுப்பெற்ற முன்னாள் திருத்தந்தை பதினாறாம் பெனடிக்ட் அவர்களுக்காக இறைவனுக்கு நன்றி கூறுவோம். பேதுருவும் பவுலும் போல இரு தூண்களாய் உள்ள இவ்விருவரும் அனைத்து அசீரையும் பெற்று வாழ இறவைா உம்மை மன்றாடுகிறோம்.

2. **திருச்சபைக்காக:** அகிலத்தைப் படைத்த இறைவா, தூய பேதுரு, பவுலைப்போன்று திருச்சபையை ஆளுகின்ற ஆயர்கள், குருக்கள் உறுதியான உள்ளத்துடன் இறை மக்களை ஆழ்ந்த விசுவாசத்தில் வழிநடத்தி சாட்சியாய் வாழ தேவையான இறை ஞானத்தையும் வல்லமையும் தந்து இவர்களின் ஆன்ம சரீர நலன்களை பாதுகாக்க உம்மை மன்றாடுகிறோம்.

3. **பங்கு மக்களுக்காக:** அன்பு தந்தையே இறைவா, பங்கு மக்கள் யாவரும் இறைவார்த்தையில் விசுவாசம் கொண்டு இறைவார்த்தையை மற்றவர்களிடத்தில் பகிர்ந்து இறைவனோடு ஒன்றித்து வாழ தாழ்ச்சி, விட்டுக்கொடுத்தல், சமாதானம் இவைகளை அனுதினம் கடைப்பிடித்து வாழும் மனப்பக்குவத்தை இறைவன் அருளி, நோய்கள், கடன்சுமை, பணம் பற்றாக்குறை இவைகளை நீக்கி இறையருள் பங்கிலுள்ள ஒவ்வொரு குடும்பங்களுக்கும் கிடைக்கப்பெற உம்மை மன்றாடுகிறோம்.

4. **நாட்டுத்தலைவர்களுக்காக:** தமத்திருத்துவ தேவனாகிய இறைவா, புதிதாக ஆட்சிப் பொறுப்பேற்றுள்ள தலைவர்கள் கடந்த காலத்தில் ஏற்பட்ட இடர்பாடுகளையும் அனுபவங்களையும் கருத்தில் கொண்டு பணம் ஒன்றையே குறிக்கோளாக கொள்ளாமல் மக்களின் நலன் கருதி உழைக்கவும், நல்ல கொள்கையோடு சிறந்த திட்டங்கள் வழியாக சிறந்த நிர்வாக திறனோடு சிறந்ததோர் ஆட்சி மூலம் மக்கள் நிம்மதியாய் வாழ அருள்தர வேண்டுமென்று உம்மை மன்றாடுகிறோம்.

5. **மாணவர்களுக்காக:** நித்திய இறைவா, எம் சமூகத்திலுள்ள மாணவச் செல்வங்கள் எழுதியுள்ள தேர்வுகளில் நல்ல மதிப்பெண்களைப் பெற்று அவர்கள் எண்ணியிருக்கும் இலக்கை அடைந்து வாழ்வில் வெற்றிக்கான சிறந்த எதிர்காலம் அமைய அதன்மூலம் பெற்றோர்களும், மனநிறைவு காண உம்மை மன்றாடுகிறோம்.

## பள்ளிகள் திறப்பு பள்ளியில் பொது செபவழிபாடு

திருமதி டிலைலா சேவியர்

**முன்னுரை**

ஆண்டவரிடம் கொள்ளும் அச்சமே ஞானத்தின் தொடக்கம் (நீதிமொழி 11:7)

இறை இயேசுவில் பிரியமான மாணவ மாணவிகளே, மதிப்பிற்குரிய இருபால் ஆசிரியப் பெருமக்களே, இன்று நாம் அனைவரும் இப்புதிய கல்வியாண்டின் தொடக்க நாளில் இறைவன் திருமுன் ஒன்றாய் கூடியுள்ளோம். இந்நேரத்தில், எல்லாம் வல்ல இறைவன் கடந்த ஆண்டு முழுவதும் நமக்குத் தந்த நல்ல

உடல்நலம், கல்வி அறிவு, திறமைகள், பாதுகாப்பு, பொருளாதார உதவிகள், தேர்வில் வெற்றி போன்ற அனைத்து நன்மையான செயல்களுக்கும் நன்றி செலுத்துவோம்.

மேலும் இறைவன் நமக்குத்தந்துள்ள இப்புதிய கல்வி ஆண்டினையும் இறைவனின் பாதத்தில் சமர்ப்பித்து இவ்வாண்டு முழுவதும் நம்மை பாதுகாத்து வழிநடத்த வேண்டுமென்றும், வல்லமையான கரங்களினால் ஆசீர்வதிக்க வேண்டுமென்றும் இன்றைய செபவழிபாட்டில் நம்மையே தாழ்த்தி வரம் கேட்டு ஒருமனதாய் செபிப்போம்.

**பாடல்:** ஓ பரிசுத்த ஆவியே...

**விவிலிய வாசகம்:** "என் காலடிக்கு உம் வார்த்தையே விளக்கு, என் பாதைக்கு ஒளியும் அதுவே" என்று திருப்பாடல்களில் எழுதியதுபோல நம் வாழ்க்கை ஒளிதரும். இறைவன் நமக்கு தரும் செய்தியை கேட்டு தியானிப்போம். (நீதிமொழி 3: 1-12)

**செபவழிபாடு: (தேவையான பொருட்கள்)**
குத்துவிளக்கு, சிறிய செடி (தொட்டியில்), மலர்மொட்டுக்கள், புதிய பாடப்புத்தகங்கள், புதிய சீருடை, கல்வி நிலையத்தின் பாதுகாவலர் படம் அல்லது சுருபம்

"இறைவா, எனது நாளை நான் தொடங்கும்முன் உமது தொடுதலை பெறவும், உம்மோடு உறவாடவும் வந்துள்ளேன்" என்று தாகூர் தனது பாடலில் இறைவனுடைய முக்கியத்தை கூறுகிறார். நம்முடைய ஒவ்வொரு நாளும் இறைவனின் உதவியோடு மட்டுமே ஆரம்பிக்கப்படுகிறது என்பதை உணர்ந்த பேரொருளியாம் ஜோதியாம் இறைவனை நம்மிடையே அழைக்க, குத்துவிளக்கினை ஏற்றி இறைப்பிரசன்னத்தை உணர்வோம். (தலைமை ஆசிரியர் குத்து விளக்கினை ஏற்றலாம்)

**ஒளி:** ஒளியாம் இறைவா, இக்கல்வி ஆண்டினை தொடங்க இருக்கும் எங்கள் அனைவரின் உள்ளத்திலும் மனதிலும் இருக்கும் அறியாமை, இயலாமை, கல்லாமை போன்ற இருளை அகற்றி, உமது தெய்வீக ஒளியினால் எங்களைப் புதுப்பித்து, புதுப்பொலிவுடன் திகழவும், படிப்பிலும், ஒழுக்கத்திலும் சிறந்து விளங்க வேண்டுமென்றும் ஒவ்வொருவரும் மற்றவர்களுடைய வாழ்வில் ஒளியேற்றும் திரிகளாக இருக்க வேண்டுமென்றும், உம்முடைய ஒளி எங்களை என்றும் வழிநடத்த வேண்டுமென்று இறைவா இந்த ஒளியை (குத்துவிளக்கை) உமக்கு அர்ப்பணிக்கிறோம்.

**சிறிய செடி (தொட்டியில்):** இயற்கையின் தலைவரே எம் இறைவா, இச்சிறிய செடியானது நாளடைவில் வளர்ந்து பெரிய மரமாகி பல வழிகளில் அனைவருக்கும் பலன்தருவதுபோல நாங்களும் எங்கள் பள்ளியெனும் நிலத்திலே நல்ல பலன்தரும் மரங்களைப்போல நல்ல மாணவ மாணவிகளாக கற்றுத்தேர்ந்து எங்கள் பெற்றோர்களுக்கும், சமுதாயத்திற்கும், நாட்டிற்கும் பயனுள்ளவர்களாக எம்மை உருவாக்க வேண்டுமென்று செபித்து இந்தச் சிறிய செடியை உமக்கு காணிக்கையாக தருகிறோம் ஏற்றருளும் இறைவா.

**மலர் மொட்டுக்கள்:** அன்பே உருவான இறைவா, வளர்ந்து வருகின்ற இவ்வழகிய பூக்களின் மொட்டுக்களைப்போல இவ்வாண்டு இப்பள்ளியில் புதிதாக சேர்ந்திருக்கும் புதிய மாணவ மாணவிகள் மற்றும் ஆசிரியப்பெருமக்களையும் வரவேற்கிறோம். இவர்களுக்கு உமது ஆசீர் நிறைவாக கிடைக்கவும்,இவர்கள் தங்களிடமுள்ள எல்லா திறமைகளையும், அறிவாற்றல்களையும் பள்ளியின் முன்னேற்றத்திற்காகவும் தங்களை தாராளமாக கையளிக்கவும், பள்ளியின் புதிய சூழ்நிலை விதிமுறைகள் இவைகளை ஏற்று, அனைவரோடும்,மகிழ்வோடும், அன்போடும் இணைந்து செயல்பட வேண்டி வரம் கேட்டு இந்த மலர் மொட்டுக்களை உமக்கு அர்ப்பணிக்கிறோம்.

**புதிய நோட்டு புத்தகம்:** ஞானத்தின் இருப்பிடமே இறைவா, இந்த கல்வியாண்டில் எங்களுக்கு கொடுக்கப்பட்ட பாடத்திட்டத்தின்படி நாங்கள் படிக்கப்போகும் எல்லா Subject பாடங்களையும் ஆசிரியர்கள் நடத்தும்போது தெளிவாகவும், எளிமையாகப் புரிந்துக்கொள்ளும் ஞானத்தையும், படித்ததை மனதில் வைத்துக்கொள்ளும் திறனும், போட்டிகளிலும், எங்களுக்கு கொடுக்கப்படும் சவால்களிலும் எங்களுடைய திறமைகளை நல்லவைகளுக்காக பயன்படுத்தவும், வரவிருக்கும் அரசாங்கத் தேர்வில் நல்லமதிப்பெண்களுடன் வெற்றிப்பெற வேண்டுமென்றும் செபித்து இந்த நோட்டு புத்தகங்களை அர்ப்பணிக்கின்றோம்.

**புதிய சீருடை:** தூய்மையின் இருப்பிடமே இறைவா,பள்ளிகளில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளை தவிர்க்கவும், அனைவரும் சமம் என்பதை உணர்த்தும் இந்த சீருடையை நாங்கள் அணியும் ஆடைகளில் மட்டுமல்லாமல் எங்களுடைய பழக்க வழக்கங்கள், உரையாடல்கள், நட்பில் ஏழை-பணக்காரர், உயர்ந்தவர்-தாழ்ந்தவர், சாதி, மதம், இனம், மொழி போன்றவைகளில் வேற்றுமை பாராட்டாமல் இறைவன்முன் எல்லா குழந்தைகளும் ஒன்று என்ற ஒருமைப்பாட்டை எங்களுக்குள் வளர்த்துக்கொள்ளவும் அனைவருடனும் சகோதர உணர்வோடும், நட்போடும் பழகும் நல்ல மனதைத்தர வரம் கேட்டு இந்த சீருடைகளை உமக்கு அர்ப்பணிக்கிறோம்.

**பள்ளி பாதுகாவலரின் படம் (அல்லது) சுரூபம்:** நல்லாயனாம் இறைவா, இப்பள்ளியினை திறம்பட நடத்திக் கொண்டிருக்கும் எங்கள் பள்ளி தலைமை ஆசிரியரை உமது பாதத்தில் ஒப்புக்கொடுக்கிறோம். தூய ஆவியின் வரங்களால் இவரை நிரப்பியருளும். உமது கிருபையும், இரக்கமும் எங்கள் தலைமை ஆசிரியரைச் சூழ்ந்து கொள்ளட்டும். இவர்கள் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட பள்ளியையும், குழந்தைகளையும் திறம்பட நடத்தவும், எதிர்பாராமல் வரும் பிரச்சனைகளை சுமூகமாக தீர்க்கும் திறமையும் பெற்றோர்கள், ஆசிரியர்களிடமிருந்து ஒத்துழைப்பும், ஆலோசனையும் கிடைக்கும்படியும் செய்தருளும். மேலும் எங்கள் தலைமை ஆசிரியரோடு அனைத்து ஆசிரியர்களும் இணைந்து இப்பள்ளியின் பாதுகாவலரான--------------------உதவியோடும் முன்மாதிரியாக இருந்து அனைத்து பள்ளிகளுக்கும் எடுத்துக்காட்டான பள்ளியாய் உருவாக்கும் வரத்தைத் தர வேண்டுமென்று செபித்து இந்த சுரூபத்தை அர்ப்பணிக்கிறோம்.

**முடிவுரை:** அன்பு மாணவ மாணவிகளே, தற்போது செபவழிபாடு நிறைவுற்றது. இறைவன் நம்மை அன்பு செய்கிறார், நம்மைப்பாதுகாக்கிறார், என்றும் நம்முடன் இருப்பார் என்ற எண்ணங்களோடு கிறிஸ்து கற்றுக்கொடுத்த செபத்தை ஒருவர் மற்றவரின் கரங்களைப் பிடித்து செபித்துக் கொண்டு நாம் நமது வகுப்பறைகளுக்குச் செல்வோம்.

## ஞாயிறு மறைக்கல்வி திறப்பு விழா திருப்பலி

திருமதி வெர்ஜில் மேரி லூமினா

**முன்னுரை**

இயேசு குழந்தைகள்மேல் மிகவும் அக்கறையும், அன்பும் கொண்டிருந்தார். குழந்தைகள் போல் மாறாவிடில் விண்ணரசில் நுழைய முடியாது என்றும், அவர்களுக்கு இடையூறு விளைவிப்பவர்களின் கழுத்தில் எந்திரக்கல்லை கட்டி ஆழகடலில் தள்ளும்படியும் தன்னை நாடிவரும் குழந்தைகளை தடுக்க வேண்டாமென்றும் கூறினார் (லூக் 10:21). இயேசு தூய ஆவியால் பேருவகையடைந்து "தந்தையே விண்ணுக்கும் மண்ணுக்கும் ஆண்டவரே உம்மை போற்றுகின்றேன் ஏனெனில் ஞானிகளுக்கும் அறிஞர்களுக்கும் இவற்றை மறைத்து குழந்தைகளுக்கு வெளிப்படுத்தினீர். ஆம், தந்தையே இதுவே உமது திருவுளம்" என்றார்.

இயேசுவின் பிறப்பு, வளர்ப்பு, அவர்செய்த அருளடையாளங்கள், போதனைகள், அவர்பட்ட பாடுகள், அவரின் இறப்பு, உயிர்ப்பு, விண்ணேற்பு இவற்றில் மறைந்துள்ள இறை சித்தத்தை ஐயம் நீங்க ஒழுக்கத்திலும், பக்தியிலும் தங்கள் வாழ்வை சீர்செய்து விண்ணகத்திற்குரிய வழியில் சின்னஞ்சிறு ஆன்மாக்களை வழிநடத்தவே கத்தோலிக்க திருச்சபை ஞாயிறு மறைக்கல்வியை ஒரு மாபெரும் முயற்சியாக அனைத்து பங்குத்தளங்களிலும் முன்னெடுக்கிறது.

இக்கல்வியை பயிற்றுவிக்கும் ஆசிரியர்கள், தங்கள் குழந்தைகளை இக்கல்விக்கு அனுப்பிவைக்கின்ற பெற்றோர்கள், இக்கல்விக்கு ஊக்கம் தருகின்ற பங்குத் தந்தையர்கள், இதில் பயிற்சி பெறும் அனைத்து மாணவ மாணவிகளையும் எல்லாம்வல்ல இறைவன் ஆசீர்வதித்து அவர்களுடைய ஆன்மா சரீர பொருளாதார தேவைகளை பூர்த்தி செய்து இக்கல்வி வளர்ச்சிப் பாதையில் பயணிக்க இத்திருப்பலியில் ஒப்புக்கொடுத்து செபிப்போம்.

**விசுவாசிகளின் மன்றாட்டு**

1. அன்புள்ள இறைவா, மறைக்கல்வி நடைபெறும் பங்குகளிலுள்ள பங்குத்தந்தை, உதவிப்பங்குத்தந்தை மற்றும் பேரவை உறுப்பினர்கள் மறைக்கல்வி சிறப்பாக நடைபெற தாங்களும் அக்கறையுடன் உதவிபுரியும் உமது மக்களாக வாழும் வரம் வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

2. அருட்கன்னியர்கள், மறைக்கல்வி ஆசிரியர்கள், இவர்களை உம் பதம் சமர்ப்பிக்கின்றோம். இவர்கள் தன்னார்வத்தோடு மாணவர்களுக்கு மறைக்கல்வி கற்றுத்தரும் பணியினை செய்ய அவர்களை நீர் உமது தூய ஆவியினால் நிரப்பிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

3. வழிநடத்தும் வள்ளலே எம் இறைவா, எங்கள் குடும்பங்களில் இருக்கும் பிள்ளைகளை ஞாயிறு மறைக்கல்வி வகுப்பிற்கு தவறாமல் அனுப்பி உமது பாதையில் அவர்களை நல்வழியில் நடத்திச்செல்ல பெற்றோர்களை உமது அன்பினால் ஆசீர்வதித்து தங்கள் குழந்தைகளை ஒழுக்கத்திலும், பக்தியிலும் சிறந்த குழந்தைகளாக வளர்க்க பங்கிலுள்ள பெற்றோர்களை நீர் உமது பாதையில் வழிநடத்த வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

4. மறைக்கல்வி பயிலும் அனைத்து மாணவ மாணவியர்களும் ஊக்கமுடனும், உற்சாகத்துடனும், முழு விருப்பத்துடனும் மறைக்கல்வியைப் பயின்று இறைமதிப்பீடுகளின் படியும், கத்தோலிக்க திருச்சபையின் போதனைகளின் படியும் ஒழுக்கமான, பக்தியுள்ள வாழ்வு வாழும் வரமருள வேண்டி இறைவா உம்மை மன்றாடுகிறோம்.

## பகுதி 2: விசுவாசத்தில் வளர...

### இயேசுவின் திரு இருதயம் தரும் இரக்கத்தின் பாடங்கள்

திருமதி ராணி வில்சன்

"உங்கள் தந்தை இரக்கமுள்ளவராய் இருப்பதுபோல நீங்களும் இரக்கமமுள்ளவராய் இருங்கள்" (லூக் 6: 36)

இந்த இறை இரக்கம் எப்போது துவங்கியது, எப்படி இறைவன் இரக்கத்தினால் நிரப்பினார், அந்த இரக்கம் தொடர்ந்து எப்படி வழிநடத்தியது, இறை இயேசு இரக்கச்செயல்களை எப்படிச் செய்யச் சொன்னார், இன்று எப்படி உள்ளது, இதற்குத் தீர்வு என்ன என்பதனைத்தையும் நாம் பார்ப்போம்.

**பழைய ஏற்பாடு**

- திபா. 25: 6 "ஆண்டவரின் இரக்கமும் பேரன்பும் தொடக்க முதலே உள்ளது
- விப 23: 1-9 இவ்வார்த்தைகளுக்கு ஏற்ப
- தொநூ. 4: 8-16 காயின் ஆபேலைக் கொன்ற பிறகு கதருகிறார் (13வது வசனம்) அங்கே இறை இரக்கம் அவரைத் தேற்றுகிறது.
- ரூத்து 3: 1-8 நகோமி, ரூத் வாழ்க்கையில் இறை இரக்கம் மாமியார், மருமகள் மேலும் மருமகள் மாமியார் மேலும் வைத்த இரக்கம் போவாசு வழியாக செயலாக்கம் பெறுகிறது.
- 1சாமுவேல் 1-7 அன்னாவிற்கு அவச்சொல்லும் அவமானமும் நேர்ந்தபோது, சாமுவேலின் பிறப்பு வழியாக இறை இரக்கம் அங்கே செயல்பட்டது
- எஸ்தர் 8 இறை இரக்கம் மொர்த்தக்காய்க்கும் எஸ்தருக்கும் எப்பேர்பட்ட வெற்றியை தந்தது.

**புதிய ஏற்பாடு**

- மத்தேயு 5: இரக்கம் வழங்கினால் இரக்கம் பெறுவீா் என கூறுகிறார் இறைவன்.
- மத் 12: 7 எப்போப்பட்ட விலையுயர்ந்த பொருளைப் பலிப்பொருளாகக் கொடுத்தாலும் பலன் இல்லை. இரக்கத்தையே விரும்புகிறேன் எனக் கூறுகிறார்.
- அதனால்தான் தானே முன்மாதிரியாக,
- மத் 15: 32ல் நான் இம்மக்கள்மீது பரிவு கொண்டுள்ளேன் எனக்கூறி உணவு கொடுத்து தனது இரக்கச் செயலைப் பறைச்சாற்றுகிறார்.

அன்பின் சிறந்த வெளிப்பாடு இரக்கம். ஏனெனில் அன்பு என வார்த்தையால் சொல்லிக்கொண்டு செயல்வடிவம் இல்லையேல் பலன் இல்லை. ஆகவே சூம்பியக்கை, முடவர்கள், செவிடர்கள், குருடர்கள்பாடு பெண், சிறுமி, சௌசரேத்தில் தொட்டவர்கள் எல்லாம் குணம் பெற்றது கானனேயப் பெண் குணம், லாசரின் உயிர்ப்பு இன்னும் பல எனச் சொல்லிக் கொண்டே போகலாம்.

**இன்று**

மத்தேயு 18: 33 "நான் உனக்கு இரக்கம் காட்டியதுபோல நீயும் இரக்கம் காட்ட வேண்டுமல்லவா?"

இரக்கம் காட்ட வேண்டிய மனிதர் இரக்கம் காட்டாமல் சமய, சமூக, அரசியல், பொருளாதார பிரச்சனைகள் இன்று நம்மையும் உலகையும் ஆட்டிப் படைக்கின்றது. நாட்டுக்கு, எல்லைக்கு, கடலுக்கு, ஆறுக்கு, நதிக்கு, மண்ணிற்கு சண்டை. திருத்தந்தை பிரான்சிஸ் தன் சுற்றுமடல் மூலமாய் "பூமியைக் காப்பாற்றுங்கள்" எனக் கூறும் அளவிற்கு பருவநிலை மாற்றம், தீவிரவாதம், உயிர்பலி, பெண் சிசுவதை, பாலியல் தொல்லைகள், நம் குடும்ப உறவுகளின் சிதைவு, உடன் பணியாளர்கள் உறவுகள் முறிவு என எங்கு நோக்கினும் அவலங்கள்.

இதையெல்லாம் சிந்தித்துப் பார்க்க வேண்டிய நேரமிது. அதனால்தான் நமது திருத்தந்தை டிசம்பர் 8 2015 முதல் நவம்பர் 20,2016வரை இறை இரக்கத்தின் ஆண்டாக அறிவித்துள்ளார். இருபெரும் பிரச்சனைகளை திருத்தந்தை 23ம் யோவான் 1962 செப்டம்பர் திங்கள் 11ம் நாள் வானொலி பேருரையில் இரண்டு மிக முக்கியமான அவசியமான செய்திகளை அறிவித்தார். ஒன்று அமைதி, இரண்டு சமூக நீதி.

**அமைதி:** மக்களை ஒற்றுமைக்கு கொண்டு வரவும் ஒருவர் மற்றவரின் உணர்வுகளுக்கும், செயல்பாடுகளுக்கும் தகுந்த மதிப்பளிக்க வேண்டும். அவ்வாறே உண்மை, நீதி, அமைதி பிறக்கும்.

**சமூகநீதி:** அநீதிகளையும், சீர்க்கேடுகளையும் ஏற்றத்தாழ்வுகளையும் கண்டிக்க வேண்டும்.

**தீர்வு செயல்படுத்த:** எப்படி இவற்றையெல்லாம் செயல்படுத்துவது, நற்செய்தி படிப்பினை மூலமும் அதன் ஒளியின் மூலமும் தான் இயலும். அது மட்டுமல்ல, திருத்தந்தை 23ம் யோவான் திருஅவை எப்படி இயங்க வேண்டும் எனவும் ஒரு மடல் எழுதியுள்ளார். திருஅவை அன்னையாகவும் ஆசிரியையாகவும் இயங்க வேண்டும் என அழைத்துள்ளார்.

இரண்டாம் வத்திக்கான் சங்கம் திருஅவை வரலாற்றில் ஒரு திருப்புமுனை.

பொதுநிலையினர் திருத்தூதுப்பணி எனும் ஏடு இயல் 02 எண் 08ல் இந்த சமூகத்தில் வறியவர், நோயாளிகள் இவர்களுக்கு காட்டும் இரக்கமே திரு அவையின் அன்புப்பணி எனக் கூறுகிறது. அதுமட்டுமல்ல, இன்றைய உலகில் திருஅவை ஏடு இயல் 02 எண் 23 முதல் 32 வரை நாம் எப்படி வாழ வேண்டும் எனவும் அறிவுறுத்துகிறது (மனிதர் மனிதருக்காய்)

**இறுதியாக**

- 1யோவான் 3: 16 "கிறிஸ்து நமக்காக உயிரைக் கொடுத்தார். அதனால் நாமும் நம் சகோதர சகோதரிகளுக்காக உயிரைக் கொடுக்க கடமைப்பட்டுள்ளோம்.
- 1 யோவான் 3: 17 உலகச் செல்வத்தை பெற்றிருப்போர் தம் சகோதர சகோதரிகள் தேவைகளில் உழல்வதை கண்டும் பரிவு காட்டவில்லை எனில் அவர்களிடம் கடவுளின் அன்பு எப்படி நிலைத்திருக்கும்.

ஆகவே, திருஅவை தரும் இப்பாடங்களை நம் கண்முன் நிறுத்தி படித்து தியானித்து இறை இரக்கத்திற்காக செபிப்போம். இறை இரக்கமாகவே வாழ சபதம் ஏற்போம்.

**தூய மார்கரெட் மேரி ஆலகோக்கு வாழ்வு தரும் செய்தி**

திரு. ஜான் அலெக்ஸ்

இயேசுவின் இதய அன்பில் நிலைத்திருந்தால்
எல்லா நன்மைகளும் பெறுவீர்கள்

பிரான்ஸ் நாட்டில் 1647, ஜுலை 22ம் நாள் பிறந்தவர் மார்க்கிரேட் மேரி அலகாக். சிறுவயது முதல் நற்கருணை ஆண்டவர்மீது அளவு கடந்த அன்பும், பக்தியும் கொண்டிருந்தார். ஒன்பது வயதில் முதல் நற்கருணை பெற்றபின் தன்னொடுக்க முயற்சியை கடுமையாக கடைபிடித்தார். பக்கவாத நோயினால் படுத்த படுக்கையாகும்வரை இது தொடர்ந்தது. அன்னை மரியாவிடம் தான் துறவியாவதாக வாக்கு கொடுத்தவுடன் புதுமையாக நலம் பெற்றார்.



தந்தையின் மரணத்தை தொடர்ந்து இவருடைய உறவினர்கள் இவர்களை ஏமாற்றியதால் ஏழ்மையின் விளிம்பில் நின்றார்கள். இந்த நேரங்களில் நற்கருணை ஆண்டவரே இவருக்கு ஒரே ஆறுதலாக இருந்தார். இயேசு பல்வேறு முறை காட்சி கொடுத்தார். அப்போதெல்லாம் அவரின் இருதயத்தில் பொங்கி வழியும் அன்பைக் கண்டு மகிழ்ந்தார். 1671 மே 25ல் தனது 24வயதில் "விசிடேசன்" சபையில் சேர்ந்தார். தனக்கு உண்மையிலேயே அழைப்பு இருக்கிறது என்பதை எண்பிக்க வேண்டிய நிலை உருவானது. அதனாலேயே வழக்கத்திற்கு மாறாக சபையில் சேர்ந்த அதே தேதியில் அடுத்த ஆண்டு திருவுடை அளிக்காமல் தள்ளிப்போட்டார்கள். 1672ல் திருவுடை அணிந்தார். மடத்தில் இருந்தபோது திருஇருதய ஆண்டவர் பலமுறை இவருக்கு காட்சி கொடுத்துள்ளார்.

**முதல் காட்சி :** 1673 டிசம்பர் 27ம் நாள் கிடைத்தது 18 மாதங்களுக்கு பிறகு கடைசி காட்சி கண்டார். தன்னுடைய இருதயத்தின் மீது தலையைச் சாய்த்து வைக்குமாறு இயேசு கூறியதாகவும் அவ்வாறு செய்தவுடன் அன்பின் அதிசயத்தை தனக்கு வெளிப்படுத்திய இயேசு, திருஇருதய பக்தியை எல்லோருக்கும் அறியச் செய்யும் கருவியாகத் தன்னைத் தேர்ந்தெடுத்ததாகவும் கூறினார். ஏறக்குறைய ஜூன் அல்லது ஜூலை 1674ல் காட்சி கொடுத்த இயேசு, திருஇருதயத்துடன் உள்ள படத்தை வைத்து வணங்குமாறு கூறினார். இருதயத்திலிருந்து அன்பின் ஒளி வெளிவருவதை கண்ட மார்கிரேட், அடிக்கடி நற்கருணை வாங்குவதும் குறிப்பாக மாதத்தின் முதல் வெள்ளி அன்று நற்கருணை உட்கொள்ளுவதும் இயேசுவின் அன்பை அபரிமிதமாகப் பெறுவதற்கு வழி என்று இயேசு கூறியதாகவும் குறிப்பிட்டிருக்கிறார்.



1675ல் காட்சி கொடுத்த திருஇருதய ஆண்டவர் தமது இருதயத்தில் விரலை வைத்து, ”இதோ மனிதர்களை அபரிமிதமாக அன்பு செய்யும் இருதயம்.... ஆனால் பதிலன்புக்குப் பதிலாக புறக்கணிப்பையே அதிகமானவர்களிடம் இருந்து நான் பெறுகிறேன்” என்று மார்கிரேட்டிடம் மொழிந்தார்.

தான் கண்ட காட்சிகள் அனைத்தையும் தமது ஆலோசகர் க்ளவ்தே தே லா கொலம்பியாரே அவர்களிடம் மார்க்கிரேட் விவரித்தார். விளக்கம் கேட்டார். பிறகு இது தூய ஆவியின் செயல்பாடு என்பதை ஏற்று திருஇருதய ஆண்டவருக்கு மார்க்கிரேட் தன்னை அர்ப்பணித்தார். பிரான்ஸ் மற்றும் இங்கிலாந்தில் மக்களிடம் பரவலாக்க நினைத்த தே லா கொலம்பியாரே மார்க்கிரேட்டிடம் தான் கண்ட காட்சி பற்றி எழுதுமாறு வேண்டினார். கொலம்பியாரே 1682 இறந்த பிறகு அவரது அறையில் உள்ள பொருட்களை சேகரிக்கும்போது மார்க்கிரேட்டின் அனுபவங்கள் பத்திரிக்கை வடிவில் தயார் நிலையில் இருப்பதை கண்டனர். அதனை லயோன்ஸில் 1684ல் வெளியிட்டனர். இதன் பிறகு துறவிகள், குருக்கள், பொதுநிலையினர் அனைவர் மத்தியிலும் திருஇருதய ஆண்டவரின் பக்தி பரவியது. திருத்தந்தை 13ம் சிங்கராயர் அகில உலகையும், அனைத்து மனித இனங்களையும் திருஇருதய ஆண்டவருக்கு ஒப்படைத்தார் (ஜுன் 11, 1899). மேலும் ஜுன் மாதம் திருஇருதய ஆண்டவருக்கான மாதம் என்று குறித்ததுடன் ஒன்பது முதல் வெள்ளிக்கிழமை பக்தி முயற்சியையும் அறிவித்தார்.

திருத்தந்தை 13ம் சிங்கராயர் அறிவித்ததில் சிறு மாற்றம் செய்து, “ஒவ்வொரு ஆண்டும் மனித இனத்தை திருஇருதய ஆண்டவருக்கு அர்ப்பணிக்க வேண்டும்” என்று திருத்தந்தை 10ம் பத்திநாதர் அறிவித்தார். பல்வேறு திருத்தந்தையர்களும் தங்கள் காலத்தில் இப்பக்தி முயற்சியை வளர்த்தெடுத்தார்கள். திருத்தந்தை 16ம் ஆசிர்வாதப்பர் 2006, மே 15ல் இயேசு சபையின் அகில உலக தலைவர் பீட்டர் ஹன்ஸ் கோல்வன்பாச் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில் கூட திருஇருதய ஆண்டவரது பக்தி முயற்சியின் முக்கியத்துவத்தை மீண்டும் உறுதிப்படுத்தி இருக்கிறார். திருஇருதயத்தின் அன்பினை சுவைத்த மகள் மார்க்கிரேட் மேரி அலகாக் 1690 அக்டோபர் 17ம் நாள் விண்ணுலகம் சென்றார். திருத்தந்தை 9ம் பத்திநாதர் 1864 செப்டம்பர் 18ல் இவரை அருளாராகவும், 1920 மே 13ல் திருத்தந்தை 15ம் ஆசீர்வாதப்பர் புனிதராகவும் உயர்த்தினார்.

## மறைக்கல்வியின் முக்கியத்துவங்கள்

திரு. லூயிஸ் சகாயராஜ்

வானகத் தந்தையின் படைப்பினில்
வாழ்வாங்கு வாழ அழைக்கப்பட்டோம்
வளம் மிகத் தரும் இயேசுவின் அருள்மொழியால்
வாழ்வின் தீமைகள் மறையச் செய்வோம்
வரம் தரும் வள்ளலாம் தூய ஆவியாரின் துணையால்
வாழும் சாட்சியாக வாழ தேர்ந்தெடுக்கப்பட்டோம்.

இம்மாபெரும் உண்மையை நம்மில் நிலைப்பெறச் செய்யும் பணியைத்தான் திருச்சபை மறைக்கல்வி மூலம் செய்து வருகின்றது. இறையாட்சியின் மதிப்பீடுகளான அன்பு, அமைதி, நம்பிக்கை அகியவற்றை தாயின் கருவறை தொடங்கி, கல்லறை வரைக்கும் கடைபிடிக்க நம்மைப் பக்குவப்படுத்தும் சீரான நடைமுறையே மறைக்கல்வி. இம்மறைக்கல்வி நம்மிடையே முழுமையான அனுபவத்தைத் தரும்போது நமது வாழ்வு உண்மையாகவே மாற்றம் பெறும்.

சாதாரண நடைமுறை வாழ்க்கையில் நலம் காண விழைந்து நலிவடைந்து கிடக்கும் நம்மை சிறப்பான இறைமக்களாக சீர்பெற்று வளமும், நலமும் பெற்று வாழத் தூண்டிவிடும் துடிப்பான நிகழ்வே மறைக்கல்வி. மறைக்கல்வி பயின்ற, மறைக்கல்வி பயிற்சி பெற்ற ஏராளமானவர்களின் பக்குவப்பட்ட வாழ்வே இதற்கு சான்று.

நம்முடைய வாழ்வில் மறைக்கல்விக்கு எந்த இடம் தந்துள்ளோம்? என நம்மையே கேட்டுக்கொள்வோம். பின்வரும் உரையை கேட்கும்போதும் வாசிக்கும்போதும் நாம் மறைக்கல்வியின் முக்கியத்துவத்தை உணர்ந்து செயல்பட முன்வருவோம், முன்னேறுவோம்.

**மறைக்கல்வி விசுவாசத்தின் அடித்தளம்**

இவ்வுலகையும், உயிர்கள், பயிர்களையும், மனிதரையும் படைத்த இறைவனின் அருளையும், அளவிட முடியாத அன்பினால் இவ்வுலக மக்களின் பாவ இயல்புகளை மாற்றிட மனுவுருவாகி, மரணித்து மறுபடியும் உயிர்த்த இயேசுவின் அன்பையும் உயிரளித்து உரமூட்டி திருத்தூதரையும் திருச்சபையையும் நாளும் வழிநடத்தி வருகின்ற தூய ஆவியாரின் ஆற்றலையும் அறிந்து புரிந்து தெரிந்து தெளிய நமக்கு மறைக்கல்வி அவசியம்.

குழந்தைப் பருவம் முதல் முதிர் வயதுப்பருவம் வரை ஒவ்வொரு நிலையிலும் நாம் விசுவாச வாழ்வில் தளராமல் வாழ வளர திருச்சபையால் நமக்கு தரப்பட்டுள்ள ஒரு மாபெரும் தொடர் நிகழ்வே மறைக்கல்வி வாழ்வு சிறக்கவும், மறுவாழ்வு உண்டு என நம்பிக்கையுடன் வாழவும் மறைக்கல்வி நமக்கு வழிகாட்டுகிறது.

குடும்பத்திலிருந்துதான் மறைக்கல்வி தனது பயணத்தை தொடங்குகிறது. முதல் விசுவாசத் தளமாக விளங்கும் நமது குடும்பத்தில் குழந்தைகளுக்குத் தொடங்கி ஒவ்வொரு நிலையிலும் மறையறிவு அனுபவமாகவே வழங்கப்படுகிறது. அந்த அனுபவத்தை வாழ்வாக்கும் பயிற்சியே ஞாயிறு மறைக்கல்வியில் செறிவூட்டப்பட்டு நிறைவாக தரப்படுகிறது. எனவே மறைக்கல்வியின் உயர்வு, தரம், நிறைவு ஆகியவற்றைப் போற்றிப் பாதுகாக்க வேண்டியது நமது கடமையாகும்.

மறைக்கல்வி மனித வாழ்வை மாண்புறச் செய்வதுடன், புனித வாழ்வுக்கு நம்மை முன்னோக்கி வழிநடத்துகிறது. நாம் போற்றும் புனிதர்களின் வாழ்க்கையே இதற்கு உதாரணம். இயேசுவை வளப்படுத்திய மரியாவின் மறைக்கல்வி, திருத்தூதர்களை திடப்படுத்திய இயேசுவின் மறைக்கல்வி, தொடக்கக் காலத் திருச்சபையை வளர்த்த திருத்தூதரின் மறைக்கல்வி, சவுலைப் பவுலாக மாற்றிய அனனியாவின் மறைக்கல்வி, பல்வேறு இனத்தவரையும் இறைமக்களாக்கிய பவுலடியாரின் மறைக்கல்வி என விவிலிய மறைக்கல்வியும், மனித வாழ்வின் மாண்பை உயர்த்தி புனித வாழ்வுக்கு வித்திட்ட புனித மோனிகாவின் மறைக்கல்வி, புனித அகஸ்டினின் மனமாற்றிய மறைக்கல்வி, புனித தோமினிக்குவின் மரியியல் மறைக்கல்வி, புனித அசிசியாரின் இயற்கையோடு இணைந்த மறைக்கல்வி, புனித சவேரியாரின் ஆன்ம ஈடேற்ற மறைக்கல்வி, மீன்களையும் கழுதையையும் இறைபுகழ்பாட வைத்த புனித அந்தோணியாரின் மறைக்கல்வி, செபவாழ்வின் மாதிரிகையான புனித குழந்தை தெரசாவின் எளிய வழி மறைக்கல்வி, புனித தொன் போஸ்கோவின் இளைஞர் நலன் மறைக்கல்வி, அன்னை தெரசாவின் சேவை வழி மறைக்கல்வி எனப் பல்வேறு முன்மாதிரிகைகளைக் கொண்ட மாபெரும் நடைமுறையாக உள்ளது, நமது மறைக்கல்வித்தளம்.

இம்மாபெரும் நிகழ்வில் நாமும் அங்கம் வகிக்கிறோம் என்பதை நினைத்து பெருமைப்படுவோம். நமது கடமையை, பொறுப்பை உணர்ந்து மறைக்கல்விக்கு உரிய பங்கேற்பை வழங்கிடுவோம். நாம் நமது கடமையில் நிலைத்து நிற்கவும், உரிமைக்காக போராடவும், வாழ்வில் முழுமையடையவும் மறைக்கல்வி நமக்கு உதவட்டும். இதன் மூலம் நமது விசுவாச வாழ்வின் அடித்தளம் உறுதிபெறும். இறையரசின் கனவு நனவாகும், நாம் அதன் உரிமையாளராவோம்.

## திருச்சபை செய்திகள்

சகோ. சுரேஷ் இயேசுபாலன் சச.,

1. இரக்கத்தின் சிறப்பு யூபிலி ஆண்டின் ஓர் அடையாளமாக ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் பிறரன்பு நிறுவனங்கள் அமைந்தால், எவ்வளவு பொருத்தமாக இருக்கும் என்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் கூறியுள்ளார். மருத்துவமனை, முதியோர் இல்லம், கைவிடப்பட்ட குழந்தைகளுக்கு காப்பகம், கல்வி வசதியற்ற இடங்களில் பள்ளிகள், போதைப்பழக்கத்திற்கு அடிமையாகி இருப்போருக்கு மறுவாழ்வு மையம் என்று இரக்கத்தின் ஆண்டில் ஒவ்வொரு மறைமாவட்டத்திலும் ஏதாவது ஒரு முயற்சி துவங்கப்பட்டால் அது திருஅவையின் தெளிவான நிலைப்பாடாக அமையும் என்று திருத்தந்தை தன் மனதிலிருந்து எழுந்த எண்ணங்களை மக்களுடன் நேரடியாகப் பகிர்ந்துக்கொண்டார்.

2. ஏப்ரல் மாதம் 23ம் தேதியன்று திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் முற்பகல் 11 மணியளவில் வத்திக்கான் தூய பேதுரு வளாகத்திற்குத் திடீரென வந்து 16 வளர் இளம் பருவத்தினருக்கு ஒப்புரவு அருளடையாளத்தை அளித்துக் குழுமியிருந்த ஆயிரக்கணக்கான அவ்வயது சிறுவர் சிறுமியரை வியப்பில் ஆழ்த்தினார்.

3. கேராளவின் எர்ணாகுளம் மாவட்டத்தில் 28வயது நிறைந்த ஜீஷா (Jisha) என்ற தலித் இளம் பெண் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு கொடூரமாகக் கொலைச் செய்யப்பட்டிருப்பதற்கு இந்திய ஆயர் பேரவை தன் வன்மையானக் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது. இந்தியாவில் வாழும் எந்தப் பெண்ணும் பாதுகாப்பின்றி வாழ்வதை இத்தகைய வன்கொடுமைகள் வெளிச்சமிட்டுக் காட்டுகின்றன என்று இந்திய ஆயர் பேரவையின் பெண்கள் பணிக்குழு கூறியுள்ளது. வழக்கறிஞர் தொழிலுக்கென பயின்று வந்த ஜீஷா என்ற பெண் ஏப்ரல் 28ம் தேதி மாலை பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு 38 இடங்களில் உடலெங்கும் காயப்பட்டு மரணமடைந்ததையடுத்து நாட்டின் பல பகுதிகளில் கண்டன ஆர்ப்பாட்டங்கள் நிகழ்ந்து வருகின்றன.

4. குடும்பங்களை மையப்படுத்திய ஆயர் பொது அமர்வுகளின் விளைவாக எழுந்த சிந்தனைகளை மையப்படுத்தி, திருச்சபையின் படிப்பினையாக இந்த காலக்கட்டத்தில் கத்தோலிக்க குடும்பங்கள் நம்ப வேண்டிய, நிலைநிறுத்த வேண்டிய, வாழ வேண்டிய மதிப்பீடுகளையும் உண்மைகளையும் நினைவுறுத்தும் வகையில் திருத்தந்தை எழுதியுள்ள சமீபத்திய சுற்றுமடல் "அமோரிஸ் லெத்தீத்சியா" - அன்பின் மகிழ்ச்சி என்பது அதன் மொழியாக்கமாக கொள்ளலாம். மார்ச் 19, 2016 அன்று வெளிவந்த இந்த சுற்றுமடல் ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மானியம், இத்தாலியன் மற்றும் இஸ்பானிய மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளது. பாரம்பரியமாக திருச்சபை குடும்பங்களுக்கு தேவையான மதிப்பீடுகள் என்று கற்பிக்கின்ற அனைத்தையும் ஆணித்தரமாக எடுத்துரைக்கும் படிப்பினையாக இது அமைந்துள்ளது.

5. திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களை இந்தியாவுக்கு அழைக்க வேண்டும் என அனைத்திந்திய கத்தோலிக்க ஆயர் பேரவை இந்திய நடுவனரசைக் கேட்டுக்கொண்டுள்ளது. இறுதியாக 1999ஆம் ஆண்டு திருத்தந்தை தூய இரண்டாம் ஜான் பால் புது டெல்லி வந்த நிகழ்வுக்குப் பின் திருத்தந்தை பெனடிக்ட் அவர்களோ அல்லது திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களோ இந்தியாவுக்கு வருகை தரவில்லை. வத்திக்கான் நாட்டின் அதிபர் என்ற முறையில் நமது இந்திய அரசு அவரை முறையாக அழைக்க வேண்டும் என்பதே விதிமுறையாகும். மார்ச் 17 அன்று இந்த வேண்டுகோல் இந்திய நடுவனரசிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

## சுடர் வாசகர் போட்டி முடிவுகள் - 22

1. கிறிஸ்தவர்களின் சகாய அன்னை
2. Catechism of the Catholic Church
3. தூய பவுல்
4. திருமணமானவர்
5. தவறு
6. ஓ என் இயேசுவே
7. தூய ஆவியானவர்
8. பீகார்
9. திருத்தந்தை 7ஆம் பயஸ் (பத்திநாதர்)
10. திருத்தந்தை 12ஆம் பத்திநாதர்
11. 13.5.1917 முதல் 13.10.1917 வரை தோன்றினாள்
12. பேரருள் திரு தாமஸ் பாலசாமி
13. வரங்கள் 1கொரி 12: 8-10
    கனிகள் கலாத் 5: 22
    கொடைகள் எசாயா 11: 2-3
14. 20 ஆண்டுகள்
15. தூய ஆவியார்

## சரியான விடையெழுதி பரிசு பெறும் வெற்றியாளர்கள்

Sr. Fathima, F.X. Convent, Broadway

## சுடர் வாசகர் போட்டி - 23

1. பள்ளி திறப்பு விழா செபவழிபாட்டில் ஒளி நம்மிடமிருந்து எதை அகற்றுகின்றது என்று ஆசிரியர் கூறுகின்றார்?
2. "மாசற்ற" என்ற அடைமொழி மரியன்னைக்கு யாரால் வழங்கப்பட்டது?
3. திருஇருதய ஆண்டவருக்கு ஒப்புக்கொடுக்கப்பட்ட மாதம் எது?
4. திருச்சபையின் முதல் திருத்தந்தை யார்?
5. மற்றவர்களிடமிருந்து வேறுபட்டு நிற்க நமக்கிருக்கும் அடையாளம் எது?
6. தான் விரைவில் இறக்கப் போவதாக வானதூதரே நேரில் வந்து கூறியதாக கூறிய இம்மாத புனிதர் யார்?
7. "நான் உனக்கு இரக்கம் காட்டியது போல உன் உடன்பணியளனுக்கு நீயும் இரக்கம் காட்ட வேண்டாமா" இந்த வசனம் திருவிவிலியத்தில் எந்தப் பகுதியில் உள்ளது?
8. கிறிஸ்தவர்கள் என்ற பெயரை முதன்முதலில் பெற்ற மக்கள் யார்?
9. தூய பதுவை அந்தோணியாரின் பெற்றோர் யாவர்?
10. இறுதியாக இந்தியா வருகைத்தந்த திருத்தந்தை யார்? எப்போது,
11. தூய தாமஸ் மூர் செய்த தொழில் என்ன?
12. பெர்தினாந்து என்ற இயற்பெயரைக் கொண்ட புனிதர் யார்?
13. பெண்களில் பிறந்தவர்களில் இவரை விட உயர்ந்தவர் எவருமில்லை? யார் யாரைப்பற்றிக் கூறியது?
14. தூய தாமஸ் மூர் யாருக்கு பாதுகாவலர்?

15. பதுவை அந்தோணியார் சிலுவை அடையாளம் வரைந்த சலவைக்கல் இப்பொழுது எங்கே உள்ளது?

## அடுத்த சுடரில்

**பகுதி -1: வழிபாட்டு வழிகாட்டி**

தூய மரிய கொரற்றி
அருளாளர் ஆன்மரி ஜவுஹே
கார்மேல் அன்னை
தூய கமில்லஸ்
தூய பெனடிக்ட்
தூய மகதலா மரியா
தூய சுவக்கின் அன்னம்மாள் - Grand Parents' Day
தூய அல்போன்சு
தூய மார்த்தா
தூய யாக்கோபு திருத்தூதர்
பொதுக்கால ஞாயிறுகள் - 5

**பகுதி - 2: விசுவாசத்தில் வளர...**

முதியோருக்கு மதிப்பும் அன்பும் (அன்னம்மாள் சுவக்கீன் விழா)
அல்போன்சம்மாள் தரும் வாழ்வின் பாடங்கள்
கார்மேல் அன்னை வரலாற்று குறிப்பு

**அன்பு நிறை வாசகர்களே!**

இந்த மாத "சுடர் வாசகர் போட்டி" பதில்களை ஜூன் 20ஆம் தேதிக்குள் அனுப்பி வைக்கவும். சரியான பதில்களை எழுதி குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்படும் மூன்று பங்கேற்பாளர்களுக்கு சிறப்பு பரிசுகள் வழங்கப்படும். (சரியான முகவரியை குறிப்பிடவும்)

**தீபகச் சுடர்**

அன்பு வாசகர்களே!

மாதம் தவறாமல் ஒரு பிரதிப்பெற ஆண்டு சந்தா ரூ. 100/ செலுத்தி உங்கள் பெயரை பதிவு செய்துக் கொள்ளுங்கள்.

**தீபகம்**
தொன்போஸ்கோ மறைப்பணி மையம்
45, லேண்டன்ஸ் சாலை
கீழ்ப்பாக்கம், சென்னை-600 010.
தொலைப்பேசி: 044-26428162.

பெயர்: ..............................
முகவரி: ..............................
........................................
........................................
........................................
தொலைப்பேசி: ......................